## அபிவிருத்தி லொத்தர் சபை 2018

-----------------------------------------------------------------------------------

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அபிவிருத்தி லொத்தர் சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புகள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புடைய தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன்

தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

### 1.5.1 பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்கொள்ளப்படுகின்றன.

| குறித்த நியமத்திற்கான தொடர்புடனான இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **<u>இ.க.நி. 16</u>** | | |
| (அ) சபையினால் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்ட ரூபா 147,695,903 கிரயமான பெறுமதி பூச்சியமான நிலையான சொத்துக்களின் பயன்படு ஆயுட்காலம் எதிர்வு கூறப்பட்டு புத்தகங்களில் காண்பிப்பதற்கு அல்லது அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இணங்குகின்றேன். சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளகக் குழு நியமிக்கப்பட்டதன் பின்னர் எதிர்வரும் வருடம் முதல் மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது. | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும் என்பது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நியமத்தின் 34 ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கமைய அபிவிருத்தி லொத்தர் சபையின் காணி, கட்டிடங்கள் 2010 திசெம்பர் 31 ஆந் திகதியின் பின்னரும், இயந்திரம் மற்றும் பொறிகள் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியின் பின்னரும் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு இற்றைய பெறுமதியில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | இணங்குகின்றேன். 2019 மே 30 ஆந் திகதி மதிப்பீட்டு அறிக்கை கிடைத்துள்ளது. 2019 கணக்காய்டின் போது பதிவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (இ) | நியமத்தின் 37 ஆம் பந்திக்கமைய ஒரே தன்மையையுடைய சொத்துக்கள் ஒரே தொகுதியின் கீழ் வகைப்படுத்தப்பட வேண்டிய போதிலும், கலைக்கூடம், முச்சக்கர வண்டிகள் மற்றும் கைத்தொலைபேசி ஆகியன முறையே கட்டிடம், வாகனம் மற்றும் அலுவலக உபகரணம் எனும் தொகுதிகளின் கீழ் காண்பிப்பதற்கு பதிலாக வெவ்வேறான உருப்படிகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | இணங்குகின்றேன். திருத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |

### 1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | குறித்த நியமத்திற்கான தொடர்புடனான இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 செப்தெம்பர் 13 ஆந் திகதி ரூபா 5,565,000 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்ட டபள் வீல் க்கு கெப் வண்டி இன்னும் சபையின் பெயரில் பதிவு செய்யப்பட்டிராததுடன், பிரச்சார வண்டியொன்றாக **மேம்படுத்துவதற்காக வெளிவாரி தரப்பினருக்கு வழங்கப்பட்டிருந்தது. அதனால் அதன் பெறுமதி நடைமுறை வேலைகளின்** கீழ் சீராக்கப்பட | இணங்குகின்றேன். 2019 ஆம் ஆண்டின் போது இதனை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியான வகைப்படுத்தலின் கீழ் கணக்கு வைக்கப்படவேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டிய போதிலும், நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. மேலும், இதற்காக 2018 ஆம் ஆண்டிற்கான பெறுமானத்தேய்வு செலவினமாக ரூபா 376,016 தொகை கணக்கு வைக்கப்பட்டிருந்தது. அதற்கமைய நடைமுறை வேலைகளின் பெறுமதி ரூபா 5,565,000 இனால் குறைவாகவும், பெறுமானத் தேய்வு செலவினம் ரூபா 376,016 இனால் கூடுதலாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | ஏற்பாடுகளின் பிரகாரம் லொத்தர் சீட்டிழுப்பின் போது அந்த திகதியிலிருந்து 06 மாதங்கள் கடந்த பின்னரும் உரித்து கோரப்படாத பரிசுகளுக்காக நிதியேற்பாடுகள் மேற்கொள்ளக்கூடாத போதிலும், 2018 பெப்ரவரி 28 ஆந் திகதி நடாத்தப்பட்ட வனிதா வாசனா விசேட சீட்டிழுப்பிற்குரிய உரித்து கோரப்படாத ரூபா 2,549,000 தொகை மீளாய்வாண்டின் இறுதியில் தொடர்ந்தும் வெல்லப்படாத பரிசில்கள் செலுத்தப்பட வேண்டிய கணக்கில் முன்கொண்டுவரப்பட்டிருந்தது. | இணங்குகின்றேன். 2019 பெப்ரவரி மாதம் பொதுப் பேரேட்டினூடாக திருத்தப்பட்டுள்ளது. | ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்குகளுக்குரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது. |
| (இ) | 2018 நவம்பர் 01 ஆந் திகதி ரூபா 45 இலட்சத்திற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த இயந்திரம் மற்றும் பொறிகளின் பெறுமதியானது இயந்திரம் மற்றும் பொறிகளின் கீழ் வகைப்படுத்தப்படாது அலுவலக உபகரணங்களின் கீழ் வகைப்படுத்தப்படாமையால் பெறுமானத்தேய்வு சதவீதம் மாற்றமடைந்தமையின் அடிப்படையில் 2018 ஆம் ஆண்டின் பெறுமானத்தேய்வு செலவினம் ரூபா 94,000 இனால் கூடுதலாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | இணங்குகின்றேன். இந்த வருடம் முதல் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கினறேன். | சரியான வகைப்படுத்தலின் கீழ் கணக்கு வைக்கப்பட்டு உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியமை. |
| (ஈ) | 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான இறுதிக் கணக்குகளின் நடைமுறை | இது தொடர்பில் இலஞ்ச மற்றும் ஊழல் ஆணைக்குழுவிற்கு | இலஞ்ச மற்றும் ஊழல் ஆணைக்குழுவில் வினவி கணக்குகளில் |

| | | | |
|---|---|---|---|
| | வேலையான காண்பிக்கப்பட்டுள்ள பெறுமதியான ரூபா 1,583,595 தொகை 2014 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற மீதியொன்றாவதுடன், அது நிறுத்தப்பட்ட தீர்மானங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப செலவினம் ஆகும். அந்த பெறுமதிக்காக கணக்குகளில் உரிய சீராக்கங்களை மேற்கொள்ளாது 04 வருடமாக தொடர்ந்தும் நடைமுறை வேலையான கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | கிடைத்த முறைப்பாடொன்றிற்கமைய அபிவிருத்தி லொத்தர் சபையின் கோவைகளை வருவித்து பரிசோதிக்கப்பட்டு கூற்றுக்கள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. | உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியமை. |
| (உ) | இரண்டு லொத்தர்களுக்குரிய செலுத்த வேண்டிய வெல்லப்படாத பரிசுகள் கணக்குகளில் காணப்பட்ட மீதிகள் மற்றும் பரிசில்களாக காணப்பட வேண்டிய மீதிகளுக்கிடையே ரூபா 3,379,690 கூட்டுத்தொகையான வேறுபாட்டிற்காக கணக்குகளில் உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இணங்குகினறேன். 2019 ஆம் ஆண்டின் பெப்ரவரி மாதப் பொதுப் பேரேட்டினூடாக திருத்தப்பட்டுள்ளது. | பேரேட்டுக் கணக்குகளில் சரியான மீதியானது புலப்படுத்தப்பட வேண்டும் என்பது. |
| (ஊ) | சபையின் 2017 ஆம் ஆண்டிற்குரிய வருமான வரிக் கணிப்பீட்டின் போது நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்பட்டிருந்த ரூபா 26,987,404 ஆன வட்டி வருமானம் தேறிய வட்டி வருமானமாக கருதி சீராக்கப்பட்டிருந்தமையால், அந்த ஆண்டிற்கான வட்டி வருமானம் ரூபா 2,998,601 இனால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக மீளாய்வாண்டின் வரிச் செலவினமும் ரூபா 839,608 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | இறுதி வரித் தொகையை செலுத்தும் போது நிறுத்தி வைத்தல் வரியாக அனுப்பப்பட்ட பெறுமதி குறைக்கப்படும். | வருமான வரிக் கணிப்பீட்டின் போது சரியான வட்டி வருமானத்தின் அடிப்படையில் கணிப்பிடல் மேற்கொள்ளப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டியமை. |

**1.5.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகளின்மை**

(அ) நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும் ரூபா 9,467,671 கூட்டுத்தொகையான செலவினக் கணக்கு மீதிகள் 07 தொடர்பில் உரிய சான்றுப்படுத்தும் சான்றுகள் இல்லாதிருந்தமையால் அந்த விடயங்களை திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்தவோ அல்லது மெய்மையாய்வுக்கு உட்படுத்தவோ முடியாதிருந்தது.

| | <u>விடயம்</u> | <u>தொகை</u><br>ரூபா | <u>அளிக்கப்படாத கணக்காய்வு சான்றுகள்</u> | <u>முகாமைத்துவத்தின் கருத்துரை</u> | <u>பரிந்துரைகள்</u> |
|---|---|---|---|---|---|
| (i) | விற்பனை பிரதிநிகளின் கூட்டங்களுக்கா | 196,955 | எரிபொருள் பட்டியல்களுக்குரிய வாகன இலக்கங்கள் | எரிபொருள் பட்டியல்களுக்குரிய வாகன இலக்கங்கள் | ஆவணங்கள் மற்றும் பதிவேடுக |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | க ஒதுக்கப்பட்ட வாகனங்களுக்காக எரிபொருள் பெற்றுக்கொள்ளல் | | மற்றும் திகதி. | மற்றும் திகதிகள் எதிர்காலத்தில் சரியாக உள்ளடக்கப்படும். | ள் முறையாக பேணப்பட வேண்டும். |
| (ii) | வாடகை அடிப்படையில் வாகனங்களை பெற்றுக்கொள்வதற்கான கொடுப்பனவு. | 1,794,195 | ஓட்டம் தொடர்பான மாதாந்த அறிக்கை மற்றும் வாகனங்களை வாடகைக்கு பெற்றுக்கொள்வதற்கான அமைச்சு செயலாளரின் விசேட அனுமதி. | வாகன ஓட்டம் தொடர்பான மாதாந்த அறிக்கைகளை எதிர்காலத்தில் சமர்ப்பிப்பதற்கு உத்தியோகதர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | ஏற்பாடுகளின் பிரகாரம் ஆவணங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணப்பட வேண்டும் என்பது. |
| (iii) | உதவி பொது முகாமையாளர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட வாகனங்களுக்கான எரிபொருளை பெற்றுக்கொள்ளல். | 1,194,648 | சபையினால் விசேட அங்கீகாரம் கோரப்பட்டு அனுப்பப்பட்ட கடிதம், சனாதிபதி செயலகத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட விசேட அங்கீகாரம் மற்றும் திறைசேரியிடமிருந்து விசேட அங்கீகாரம் பெற்றுக்கொண்ட கடிதம். | குறித்த கடிதங்களின் பிரதிகள் இன்றளவில் அனுப்பப்பட்டுள்ளது. | உரிய முறையில் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியமை. |
| (iv) | டுழவவநசல ளுாழிள 31 பண்டக்குறியீடு (டீசயனெபெ) செய்தல் | 1,368,860 | ஒப்பந்ததாரர்களுடன் உரிய பணி தொடர்பில் உடன்படிக்கையொன்றை கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எழுத்துமூல உடன்படிக்கையொன்றை கைச்சாத்திடுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். ஒப்பந்ததாரர்களுக்கு உறுதிப்படுத்தலொன்று வழங்கப்பட்டுள்ளமையால் அதன் மூலம் உடன்படிக்கையொன்று உருவாகியுள்ளது. | முறையான எழுத்துமூல உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட வேண்டும் என்பது. |
| (v) | கள உத்தியோகத்தர்களின் மாதாந்த கூட்டம். | 552,257 | ஆண்டினுள் நடாத்தப்பட்டிருந்த கூட்டங்களின் எண்ணிக்கை, கூட்டம் நடாத்தப்பட்டமைக்கான நோக்கங்கள் மற்றும் கூட்டங்களில் பங்குபற்றிய உத்தியோகத்தர்களின எண்ணிக்கை. | கள உத்தியோகத்தர்கள் அலுவலகத்திற்கு வருகைதரும் நாட்களில் கைவிரலடையாள இயந்திரத்தில கைவிரலடையாளமிடுமாறு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. கூட்டத்திற்கு வருகைதரும் | இந்த கூட்டங்களுக்காக கருத்திற்கொள்ளப்படக்கூடிய அளவிலான கிரயமொன்று மேற்கொள்ளப்படுகின் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | உத்தியோகத்தர்களுக்கு கையொப்பமிடுவதற்கான பதிவேடொன்றினை எதிர்காலத்தில் அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | றமையால் உத்தியோகத்தர்களின் வருகையினை உரிய முறையில் பதிவு செய்ய வேண்டியமை. |
| (vi) | விற்பனை சந்தைப்படுத்தல் உருப்படிகள் | 3,142,044 | பகிர்ந்தளித்தல் பட்டியல் மற்றும் மேம்படுத்தல் உருப்படிகள் பெற்றுக்கொண்டமைக்கான சான்றுகள். | விற்பனை சந்தைப்படுத்தல் உருப்படிகள் பெற்றுக்கொண்டமைக்கான ஆவணங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. | அவ்வாறான பதிவேடுகள் இணைக்கப்பட்டிராததுடன், உரிய முறையில் குறித்த பட்டியல்களை பேணிச்செல்ல வேண்டும். என்பது. |
| (vii) | கள உத்தியோகத்தர்களின் எரிபொருள் படிகள் | 1,218,712 | ஓட்டக் குறிப்புகள், சம்பவக் குறிப்பு புத்தகங்கள் மற்றும் லீட்டரொன்றில் 35 கி.மீ. ஓட்டத்தில் ஈடுபடுத்தக்கூடியமையை தீர்மானிக்கும் போது கவனத்திற் கொள்ளப்பட்ட விடயங்கள். | கள உத்தியோகத்தர்களுக்கான ஓட்டக் குறிப்புகள், சம்பவக் குறிப்பு புத்தகங்கள் 2019 ஏப்ரல் மாதத்தின் ஆரம்பம் முதல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அவ்வாறு பேணப்பட்டிராத சந்தர்ப்பங்களில் அவரின் எரிபொருள் படி இடைநிறுத்தப்படும். | எரிபொருள் படிகளை பெற்றுக்கொள்ளும் உத்தியோகத்தர்கள் அந்த எரிபொருளை பயன்படுத்திய விதத்தினை உறுதிப்படுத்தக்கூடியவாறு சான்றுகள் பேணப்பட வேண்டும். |

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| (ஆ) மீளாய்வாண்டிற்குரிய | பணிப்பாளர் சபை பத்திரம் | பணிப்பாளர் சபை |

சபையின் பணிப்பாளர் சபை பத்திரம் மற்றும் பணிப்பாளர் சபைத் தீர்மானங்கள் உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் துரிதமாக கணக்காய்விற்கு வழங்குமாறு 2016 ஆம் ஆண்டு முதல் கணக்காய்வு ஐய வினாக்கள் மற்றும் பல்வேறு தகவல் கோரும் கடிதங்களினூடாக கோரப்பட்டிருந்த போதிலும், குறித்த தகவல்கள் உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பின்னரும் துரிதமாக கணக்காய்விற்கு வழங்குவதற்கு முகாமைத்துவம் தவறியிருந்தது. அவ்வாறே அந்த காலப்பகுதியினுள் நடாத்தப்பட்ட கணக்காய் வகுழுக் கூட்டங்களில் இந்த நிலமையை சீர்ப்படுத்திக்கொள்வதாக இணங்கியிருந்த போதிலும், கொடுக்கல் வாங்கல்களை நடைமுறைப்படுத்தி நிறைவு செய்யப்பட்ட பின்னரும் 02 முதல் 04 வருடங்களுக்கு இடைப்பட்ட கால தாமதத்தின் பின்னர் அந்த அறிக்கைகளை சமர்ப்பிக்கும் நடைமுறையொன்று பின்பற்றப்பட்டிருந்தது. இதன் காரணமாக அறிக்கையில் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ள சில நட்டங்கள் மற்றும் அபாயங்களை குறைத்துக்கொள்ள சபைக்கிருந்த சந்தர்ப்பம் இழக்கப்பட்டுள்ளதா எனும் சந்தேகத்தினை கணக்காய்வில் புறக்கணிக்க முடியாதிருந்தது.

மற்றும் தீர்மானங்கள் இதற்கடுத்த பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் வழங்கப்படுவதுடன், சந்தைப்படுத்தலுக்குரிய பணிப்பாளர் சபை பத்திரம் மற்றும் தீர்மானங்கள் மாத்திரம் அவை நடைமுறைப்படுத்தப்பட்டதன் பின்னர் நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பத்திரம் மற்றும் பணிப்பாளர் சபைத் தீர்மானங்கள் உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு கால தாமதமின்றி கணக்காய்விற்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது.

## 1.6 பெற வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய பணம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வொக்ஷெல் வீதியின் இலக்கம் 234 கொண்ட கட்டிட வாடகையை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்காக கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தம், ஒரு தரப்பாக சபையினால் மீறப்பட்டமையால் சபைக்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 5,700,000 தொகையான பணம் 15 வருடங்களாக அறவிட முடியாதிருந்தது. | பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் இதனை கணக்குகளிலிருந்து பதிவழிப்பதற்கு அமைச்சின் அங்கீகாரம் கோரப்பட்டுள்ளது. | நீண்ட காலமாக அறவிடப்பட வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு அல்லது அவற்றை உரிய முறையில் தீர்க்கப்பட வேண்டும் என்பது. |
| (ஆ) | சபையினால் 2012 ஆம் ஆண்டின் போது செலுத்தும் அடிப்படையில் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள்களுக்காக 06 வருடங்கள் கடந்திருந்த போதிலும், அதற்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 192,817 தொகையான பணம் 1 முதல் 6 வருடங்களுக்கு இடைப்பட்ட காலமாக விற்பனை கூடாரங்களை நிர்மாணிப்பதற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 551,248 தொகையான பணமுமாக ரூபா 744,065 கூட்டுத்தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ரூபா 584,065 ஆன தொகையை அறவிடுவதற்கு முடியாமையால் பணிப்பளர் சபையினால் அதனை பதிவளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளமையால், எதிர்காலத்தில் கணக்குகளிலிருந்து அகற்றப்படும். ரூபா 100,00 ஆன தொகை தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டியதாக இருந்தது. | நீண்ட காலமாக அறவிடப்பட வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு அல்லது அவற்றை உரிய முறையில் தீர்க்கப்பட வேண்டும் என்பது. |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| (அ) | 1997 இன் 20 ஆம் இலக்க அபிவிருத்தி லொத்தர் அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 17(5) ஆம் பிரிவு | உரித்து கோரப்படாத பணத்தை வெகுமதிகளாக ரூபா 44,733,538 தொகையும், உரித்து கோரப்படாத நிதியல்லாத வெகுமதிகளாக ரூபா 24,948,808 பெறுமதியுமாக ரூபா 69,682,346 கூட்டுத்தொகையினை நிதியத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விசேட லொத்தர் சீட்டிழுப்புகளின் போது உரித்து கோரப்படாத பணப் பரிசில்கள் மற்றும் விடயங்களின் நிதி ரீதியான பெறுமதி 6 மாதங்கள் கடந்த பின்னர் மீண்டும் விசேட மேம்படுத்தல் லொத்தர்களுக்காக பயன்படுத்தப்படும். | அதிகாரச்சட்டத்தின் நோக்கங்களுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது. |
| **(ஆ)** | **அரச நிதிச் சுற்றறிக்கை**<br><br>2015 யூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | | | |
| (i) | 3 ஆம் பந்தி | ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளாது 02 வாகனங்கள் ரூபா 5,500,000 தொகைக்கு கைத்தவிர்ப்பு செய்யப்பட்டிருந்தது. மேலும், 2018 ஆம் ஆண்டினுள் 10 வருடங்களை கடந்த 6 வாகனங்கள் தொழில்நுட்ப அறிக்கையொன்றினை பெற்றுக்கொள்ளாது பழுதுபார்க்கப்பட்டிருந்ததுடன், அதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் ரூபா 1,612,602 ஆகும். | எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலவும் சட்டங்கள், விதிகள் மற்றும் சுற்றறிக்கைகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |
| (ii) | 12 ஆம் பந்தி | வாகன கைத்தவிர்ப்பு தொடர்பில் ஏற்பாடுகளின் பிரகாரம் அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிக்கையிடப்பட்டு, அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலவும் சட்டங்கள், விதிகள் மற்றும் சுற்றறிக்கைகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |
| **(இ)** | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின்** | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| **தாபனவிதிக் கோவை** (VIII) அத்தியாயத்தின் 4.1 ஆம் பந்தி | - | கள உத்தியோகத்தர்களுக்கு மேலதிக நேர கொடுப்பனவுகளுக்காக உரித்தில்லாத போதிலும், சபையின் கள உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 1,337,265 ஆன மேலதிக நேர படிகள் செலுத்தப்பட்டிருந்தன. | சேவைத் தேவைப்பாட்டின் அடிப்படையில் கள உத்தியோகத்தர்களுக்கு செலுத்த நேர்கின்றமை. | ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது. |
| | - | பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு 1/20 படியினை பெற்றுக்கொள்வதற்காக தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நாளொன்றிற்கு 08 மணித்தியால்ங்கள் கட்டாயமாக கடமையாற்ற வேண்டும். எனினும் சபையினால் அந்த ஏற்பாடுகளை கருத்திற்கொள்ளாது விடுமுறை நாட்களில் பதவிநிலை உத்தியோகத்தர்கள் பணியாற்றிய மணித்தியாலங்களின் அடிப்படையில் மணித்தியாலமொன்றிற்கு ஒன்றரை மணித்தியாலம் எனும் விகிதத்தில் மேலதிக நேர படிகளாக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. மேலும், அந்த நாட்களிலேயே பதவிநிலை உத்தியோகத்தர்கள் சீட்டிழுப்பு பணிகளிலும் பங்குபற்றி அந்த கொடுப்பனவுகளையும் பெற்றுக்கொண்டிருந்தனர். | 2019 மே 21 ஆந் திகதிய DLB/ADM/02 எனும் பெயருடைய சுற்றறிக்கையின் பிரகாரம் பதவிநிலை உத்தியோகத்தர்கள் சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களில் கடமையில் ஈடுபடும் போது ஆகக் குறைந்தது 04 மணித்தியாலங்கள் பணியாற்ற வேண்டும் என்பதும் அதற்கமைய கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதும். | தாபனவிதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | - தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளை கருத்திற்கொள்ளாது மணித்தியாலமொன்றிற்கு குறைவான காலப்பகுதிகள் ஒன்று சேர்க்கப்பட்டு மேலதிக நேர படிகள் செலுத்தப்பட்டிருந்தன. | நிறுவனத்தின் சேவைத் தேவைப்பாட்டின் அடிப்படையில் மேலதிக நேர படிகள் செலுத்தப்பட்டுள்ளதுடன், உரிய நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கின்றேன். | தாபனவிதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |
| **(ஈ)** | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை** ------------------------------- | | | |
| | (i) நிதிப்பிரமாணம் - 103 மற்றும் 103(1) எ | - வாகனமொன்று 3 சந்தர்ப்பங்களில் விபத்துகளுக்கு உள்ளாகியுள்ள போது அதற்காக பொறுப்புக்கூற வேண்டிய நபர்கள் தொடர்பில் உரிய முறையில் நடவடிக்கை எடுக்காது சபையினால் ரூபா 129,200 செலவிடப்பட்டு அந்த வாகனம் பழுதுபார்க்கப்பட்டிருந்தது. | விபத்திற்கு நேரடியாக பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |
| | | - 2018 மார்ச் 05 ஆந் திகதி ஒப்பந்த அடிப்படையில் இணைத்துக்கொள்ளப்பட்டு 2018 யூலை 07 ஆந் திகதி நிரந்தரமாக்கப்பட்ட சாரதியொருவரிடமிருந்து 2018 ஏப்ரல் முதல் திசெம்பர் மாதம் வரையிலுமான காலப்பகுதியினுள் 04 வாகனங்களுக்கு 05 விபத்துகள் நேர்ந்துள்ளன. அந்த அனைத்து விபத்துக்களும் கவனமின்றி வாகனம் செலுத்தியமையால் இடம்பெற்றுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளமையால் அது தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விபத்திற்கு நேரடியாக பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினரிடமிருந்து நட்டத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும், சாரதிக்கு எச்சரிக்கை கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளதாகவும். இயற்கையான காரணங்களின் அடிப்படையில் இடம்பெற்ற விபத்துகளுக்காக பொலிஸ் அறிக்கையினை வழங்குதல் பொலிஸ் நிலையங்களில் நிராகரிக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| (ii) நிதிப்பிரமாணம் 757(2) | - பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்ட போதிலும், முறையான பொருள் மெய்மையாய்வு அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துக்களின் பௌதீக மெய்மையாய்வு அறிக்கை 2019 மே 30 ஆந் திகதி அரச கணக்குகள் பிரிவிற்கு கையளிக்கப்பட்டுள்ளது. | முறையான பொருள் மெய்மையாய்வு அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன், நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை மற்றும் சொத்துக்கள் உரிய முறையில முகாமை செய்யப்பட வேண்டியமை. |
| **(உ) திறைசேரி சுற்றறிக்கை** | | | |
| (i) 2011 பெப்ரவரி 11 ஆந் திகதிய பீஈடீ 57 ஆம் இலக்க நிதி அமைச்சின் சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தி | வருடாந்த விளம்பர நிகழ்ச்சித்திட்டங்களை வருடாந்த செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட்டு பொது முயற்சிகள் திணைக்களத்திடமிருந்து அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இணங்குகின்றேன். 2019 ஆம் ஆண்டு முதல் வருடாந்த நிகழ்ச்சித்திட்டங்கள் பொது முயற்சிகள் திணைக்களத்திடம் அங்கீகாரத்திற்காக முன்வைக்கப்பட்டது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள வேண்டும். |
| (ii) 2016 யூன் 17 ஆந் திகதிய 2016/06 ஆம் இலக்க அரச நிதித் திணைக்களத்தின் சுற்றறிக்கை. | ரூபா 200 மில்லியன் அல்லது ரூபா 500 மில்லியனுக்கு குறைவான பெறுகை கிரய மதிப்பீடுகளுக்காக மீளச் செலுத்தப்படாத வைப்புக்கள் ஆகக்குறைந்தது ரூபா 35,000 தொகையும், ஆகக் கூடியது ரூபா 60,000 தொகைக்கும் இடையேயான பெறுமதியொன்றாக வேண்டியதுடன், ரூபா 464 மில்லியன் பெறுமதியான விளம்பர முகவர் நிறுவனங்களை தெரிவு செய்யும் பெறுகை நடைமுறைக்கு உரியதாக சபை ஒரு நிறுவனத்திடமிருந்து ரூபா 5,000 ஆன மீள செலுத்தப்படாத வைப்புத் தொகையொன்று மாத்திரம் | சுற்றறிக்கையின் இலக்கம் 2016/06 ஏற்பாடுகளின் பிரகாரம் இதன் பின்னர் நிறுத்தி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | | |
| (ஊ) | 2018 பெப்ரவரி 20 ஆந் திகதிய 03/2018 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் 2(i) பந்தி மற்றும் 2017 ஒக்தோபர் 09 ஆந் திகதிய 2017/10/1184 ஆம் இலக்க பணிப்பாளர் சபை தீர்மானம் | அமைச்சரவையின் அங்கீகாரமின்றி 60 வயதை கடந்த ஓய்வு பெற்ற ஒருவர் 2017 ஒக்தோபர் 09 ஆந் திகதி முதல் 2019 ஏப்ரல் 14 ஆந் திகதி வரையான காலப்பகுதியினுள் ஒப்பந்த அடிப்படையில் மதியுரையாளராக சேவையில் ஈடுபடுத்தி மாதாந்தம் ரூபா 100,000 ஆன கொடுப்பனவுடன் மருத்துவ உதவிகள், போக்குவரத்து படிகளுமாக 2017 ஒக்தோபர் 09 ஆந் திகதி முதல் 2019 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 2,151,054 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | இணங்குகின்றேன். அமைச்சரவையின் அங்கீகாரத்திற்கு முன்வைக்கப்பட்டு இது வரையிலும் அங்கீகாரம் கிடைத்திருக்காததுடன், தற்போது சேவையில் நீடிப்பு செய்தல் இடம்பெற்றிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |
| (எ) | 2018 யூலை 18 ஆந் திகதிய 03/2018 ஆம் இலக்க முகாமைத்துவ கோவைகள் சுற்றறிக்கையின் (ii) ஆம் பந்தி | இந்த சுற்றறிக்கையின் விதிகளுக்கமையாது சபையின் செயற்திட்ட இணைப்பு உத்தியோகத்தர் பதவிக்காக மாதாந்த படிகள் ரூபா 50,000 தொகையும், எரிபொருள் படியாக ரூபா 35,000 தொகையும் செலுத்தும் அடிப்படையில் 2019 பெப்ரவரி 01 ஆந் திகதி முதல் 70 வயதான உத்தியோகத்தர் ஒருவர் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தார். | முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் இந்த பதவியை அங்கீகரித்துள்ளமையால் இந்த ஆட்சேர்ப்பு இடம்பெற்றுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

## 1.8 தகவல் தொழில்நுட்ப (IT) பொது கட்டுப்பாட்டு முறை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் லொத்தர் சீட்டிழுப்பிற்காக தற்போது பயன்படுத்தப்படும் கணனி மென்பொருள் சேவையானது தனியார் கம்பனியொன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டதென்பதுடன், அந்த சேவையும் முறையற்ற உடன்படிக்கை தொடர்பின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும், அந்த காரணத்தால் லொத்தர் சீட்டிழுப்பு தரவுகளின் | அபிவிருத்தி லொத்தர் சபையின் தகவல் தொழில்நுட்ப கட்டமைப்பு மற்றும் அதன் தரவுகளில் இரகசியத்தன்மையை பாதுகாக்கும் உடன்படிக்கையொன்றை கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. எதிர்காலத்தில் கட்டமைப்பினை சபைக்கு சொந்தமாக்கிக்கொள்ள பணிப்பாளர் சபை பத்திரமொன்றினை | சீட்டிழுப்புகள் மற்றும் கணக்கீட்டு முறைமையை நிறுவுதல். |

| | |
|---|---|
| பிரவேசத்தினை முழுமையாக மூன்றாம் தரப்பினருக்கு ஒப்படைப்பதால் ஏற்படக்கூடிய விளைவுகள் தொடர்பில் முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக அவதானிக்கப்படவில்லை. இந்த கணனி மற்றும் மென்பொருட்களை பராமரித்தல் மற்றும் அதனுடன் தொடர்புடைய பணிகளுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 11,995,200 தொகை உள்ளடங்கலாக 2009 ஆம் ஆண்டு முதல் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 117,410,057 தொகை அந்த கம்பனிக்கு செலுத்தப்பட்டிருந்தது. | அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 2,187,603,956 ஆன மிகையொன்றானதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டில் மிகையானது ரூபா 507,036,703 ஆகும். அதற்கமைய நிதி விளைவுகளில் ரூபா 1,680,567,253 ஆன அல்லது 331 சதவீதமான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு முன்னைய ஆண்டின் வரிக்கு முன்னைய இலாபத்தில் நிலுவை வருமானம் வரி உள்ளடங்களாக ரூபா 1,819,191,890 அல்லது 78 சதவீதமான வரிச் செலவினமொன்றை மேற்கொண்டமையும், அது மீளாய்வாண்டில் ரூபா 553,166,576 அல்லது 20 சதவீதத்தால் குறைவடைந்தமையும் பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

### 2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

மீளாய்வாண்டின் பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு கீழே தரப்பட்டுள்ளது.

| | வருமானம் / செலவினம் | 2018 | 2017 | அதிகரிப்பு / குறைவு | சதவீதம் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | நூற்றுக்கு |
| i. | டிக்கட் வருமானம் | 15,854,856,246 | 13,981,500,306 | 1,873,355,940 | 13.4 |
| ii. | ஏனைய வருமானம் | 201,525,679 | 130,891,204 | 70,634,475 | 54.0 |
| | <u>கிரயம்</u> | | | | |
| iii. | டிக்கட் அச்சீட்டு செலவினம் | 402,322,679 | 387,696,730 | 14,625,949 | 3.8 |
| iv. | பரிசு செலவினம் | 8,296,413,110 | 7,263,436,665 | 1,032,976,445 | 14.2 |
| v. | சீட்டிழுப்பு செலவினம் | 575,478,468 | 466,033,872 | 109,444,596 | 23.5 |
| vi. | பகிர்ந்தளிப்பு செலவினம் | 3,950,410,156 | 3,541,283,837 | 409,126,319 | 11.6 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | - விளம்பர கிரயம் | 391,624,924 | 386,284,208 | 5,340,716 | 1.4 |
| | - சந்தைப்படுத்தலுடன் தொடர்புடைய கிரயம் | 15,160,049 | 225,475 | 14,934,574 | 6623 |
| | - விற்பனை மற்றும் பகிர்ந்தளித்தல் கிரயம் | 441,709,412 | 448,616,423 | (6,907,011) | (1.5) |
| | - விற்பனை முகவர் தரகு | 2,898,871,342 | 2,529,189,690 | 369,681,652 | 14.6 |
| | - பகிர்ந்தளிப்பு தரகு | 203,044,429 | 176,968,041 | 26,076,388 | 14.7 |
| vii. | நிர்வாக செலவினம் | 463,619,071 | 419,811,037 | 43,808,034 | 10.4 |
| | - ஊழியர் ஊழிய செலவினம் | 275,574,584 | 250,832,151 | 24,742,433 | 9.86 |
| | - மென்பொருட்களின் பராமரிப்பு செலவினம் | 12,419,486 | 11,623,676 | 795,810 | 6.8 |
| | - மருத்துவ பட்டியல் மீளளிப்பு படிகள் | 27,347,709 | 21,519,065 | 5,828,644 | 27.1 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது ரிக்கெட் விற்பனை வருமானம் ரூபா 1,873,355,940 இனால் அல்லது 13.4 சதவீத்தினால் அதிகரித்திருந்தது. இந்த நிலமைக்கு காரணமாக அமைந்திருந்தது 07 லொத்தர் சீட்டுகளின் விற்பனை வருமானம் 0.3 சதவீதம் முதல் 50.9 சதவீதம் வரையான வீச்சில் குறைவடைந்திருந்த போதிலும், அத கோடிபதி லொத்தரின் மாத்திரம் விற்பனை வருமானம் ரூபா 2,937,269,200 இனால் அல்லது 197 சதவீதத்தினால் அதிகரித்திருந்தமை.

(ஆ) முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது சபையின் ஏனைய வருமானம் ரூபா 70,634,475 இனால் அல்லது 54 சதவீத்தினால் அதிகரித்திருந்தது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது முதலீட்டு வட்டி வருமானத்தில் 65,144,796 அல்லது 72 சதவீதமான அதிகரிப்பொன்று காணப்பட்டமை அந்த அதிகரிப்பிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

(இ) முன்னைய ஆண்டு மற்றும் மீளாய்வாண்டினை ஒப்பிடும் போது டிக்கட் செலவினத்தில் ரூபா 14,625,949 அல்லது 3.8 சதவீதமான அதிகரிப்பொன்று காண்பிக்கப்பட்டிருந்தது. இந்த அதிகரிப்பிற்கு அத கோடிபதி லொத்தரின் டிக்கட் செலவினம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போதும் ரூபா 62,527,136 இனால் 161 சதவீதத்தினால் அதிகரித்தமையும், மேலும் 08 டிக்கட்களின் டிக்கட் செலவினம் 0.8 சதவீதம் முதல் 54.6 சதவீதம் வரையான வீச்சில் குறைவடைவதற்கும் காரணமாக அமைந்திருந்தது.

(ஈ) 06 டிக்கட்களின் பரிசு செலவினத்தில் குறைவானது முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போதும் 6.6 சதவீதம் முதல் 50.5 சதவீத்திற்கு இடைப்பட்ட வீச்சில் பரப்பலடைந்திருந்தது. எனினும் அத கோடிபதி லொத்தரின் விற்பனையிலான 197 சதவீத அதிகரிப்பிற்கு ஒப்பாக பரிசு செலவினமும் ரூபா 1,468,634,600 இனால் அல்லது 197 சதவீத்தினால் அதிகரித்திருந்தமையால் மொத்த டிக்கட்களின் பரிசு செலவினம் ரூபா 1,032,976,445 அல்லது 14.2 சதவீத்தினால் அதிகரித்திருந்தது.

(உ) முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது சீட்டிழுப்பு கிரயம் ரூபா 109,444,596 இனால் அல்லது 23.51 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன், அந்த அதிகரிப்பிற்காக அத கோடிபதி லொத்தரின் சீட்டிழுப்பு செலவினம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது ரூபா 96,832,211 இனால் அல்லது 212.6 சதவீதத்தால் அதிகரித்திருந்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

(ஊ) முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக சபையின் பகிர்ந்தளிப்பு கிரயம் ரூபா 409,126,319 இனால் அல்லது 11.6 சதவீத்தினால் அதிகரித்திருந்தது. அந்த அதிகரிப்பிற்கு விளம்பர செலவினத்தில் 1.4 சதவீதம் அல்லது ரூபா 5,340,716 ஆன அதிகரிப்பும் சந்தைப்படுத்தலுடன் தொடர்புடைய கிரயத்தில் 6623 சதவீதமான அல்லது ரூபா 14,934,573 ஆன அதிகரிப்பும், விற்பனை முகவர் தரகு 14.6 சதவீதத்தினால் அல்லது ரூபா 369,681,652 ஆன அதிகரிப்பு மற்றும் பகிர்ந்தளித்தல் தரகு செலவினம் 14.7 சதவீதத்தினால் அல்லது ரூபா 26,076,388 இனால் அதிகரித்தமையும் பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

(எ) முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது சபையின் நிர்வாக செலவினம் 10.4 சதவீதத்தால் அல்லது ரூபா 43,808,034 இனால் அதிகரித்திருந்தது. இந்த அதிகரித்த அளவில் ரூபா 24,742,433 இனால் ஊழியர் ஊதிய செலவினம் பிரதிநிதித்துவம் செய்வதுடன், அதன் அதிகரிப்பு முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 9.80 சதவீதமாகும். அதற்கு மேலதிகமாக நிர்வாக செலவினத்திலான அதிகரிப்பிற்கு மென்பொருள் பராமரிப்பு செலவினத்தில் ரூபா 795,810 அல்லது 6.8 சதவீதமான அதிகரிப்பும் மருத்துவ செலவினம் மற்றும் மருத்துவமனை கட்டண செலவினத்தில் 27.1 சதவீதமான அல்லது ரூபா 5,828,644 ஆன அதிகரிப்பும் பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 2.3 விகிதப் பகுப்பாய்வு

-------------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளில் சபையின் செயற்பாட்டு, இலாபத்தன்மை மற்றும் திரவத்தன்மையை காண்பிக்கும் விகிதப் பகுப்பாய்வொன்று கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2018 | 2017 |
|---|---|---|
| | -------- | -------- |
| **<u>செயற்பாட்டு</u>** | நூற்றுக்கு | நூற்றுக்கு |
| விற்பனை வருமானத்திற்கு விற்பனை மற்றும் பகிர்ந்தளித்தல் செலவினம் | 25 | 25 |
| விற்பனை வருமானத்திற்கு விற்பனை கிரயம் | 58 | 58 |
| **<u>இலாபத்தன்மை விகிதங்கள்</u>** | | |
| மொத்த விற்பனை விகிதம் | 42 | 42 |
| தேறிய விற்பனை விகிதம் | 14 | 3.6 |
| விற்பனை மற்றும் பகிர்ந்தளித்தல் செலவின விகிதம் மொத்த செயற்பாட்டு செலவினத்தின் விகிதமாக | 89 | 89 |
| தேறிய இலாபத்தில் பரிசு கையளிப்பு விகிதம் | 17 | 59 |
| தேறிய இலாபத்திற்கு வருமான வரி விகிதம் | 25 | 358 |
| **<u>திரவத்தன்மை விகிதம்</u>** | | |
| நடைமுறை விகிதம் | 1:1.37 | 1:1.7 |
| விரைவு விகிதம் | 1:1.31 | 1:1.8 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டில் மற்றும் மீளாய்வாண்டின் போது சபையினால் மேற்கொள்ளப்படும் விற்பனை மற்றும் பகிர்ந்தளித்தல் செலவினம் விற்பனை விலையில் 25 சதவீதத்திற்கு சமனான பெறுமதியொன்றினை கொண்டிருந்தது. எனினும், முன்னைய ஆண்டில் மற்றும் மீளாய்வாண்டின் போது விற்பனை மற்றும் பகிர்ந்தளித்தல் செலவினத்தின விகிதமானது மொத்த செயற்பாட்டு செலவினத்தின் விகிதமாக 89 சதவீதமான உயர்வான பெறுமதியை கொண்டிருந்தது. இவ்வாறு பெருமளவான கிரயமொன்றினை மேற்கொள்ளல் சபைக்கு கிடைக்கும் தேறிய இலாபத்திற்கு நேரடியாக தாக்கமளிப்பதுடன், அது சனாதிபதி நிதியத்திற்கு

மேற்கொள்ளும் பங்களிப்பிறகும் பாதகமான முறையில் தாக்கமளித்துள்ளதாக அவதானிக்கப்பட்டது.

(ஆ) சபையினால் மீளாய்வாண்டின் போது ஈட்டப்பட்டுள்ள தேறிய இலாபம் 17 சதவீதத்தினையும் பிரதிநிதித்துவம் செய்வது நுகர்வோருக்கு வழங்கப்பட வேண்டிய பரிசில்களை மீள சுவீகரித்தல் மூலம் ஆகும். இந்த சதவீதம் முன்னைய ஆண்டில் 59 சதவீதமான உயர்வான பெறுமதியியை காண்பித்திருந்தமைக்கும், தேறிய இலாபத்திற்கு வருமான வரி விகிதம் 25 சதவீதம் முதல் 358 சதவீதம் வரையான உயர்வான பெறுமதியினை கொண்டுள்ளமைக்கும் காரணமாக அமைந்திருந்தது முன்னைய ஆண்டின் நிலுவை வருமான வரிச் செலவினமொன்று ஒரே தடவையில் மேற்கொள்ளப்பட்டிருந்தமை என்பது அவதானிக்கப்பட்டது.

(இ) முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் லொத்தர் விற்பனை வருமானம் ரூபா 1,873,355,940 இனால் அல்லது 13 சதவீதத்தால் அதிகரித்திருந்தமைக்கு ஒப்பாக விற்பனை கிரயம் ரூபா 1,157,046,990 இனால் அல்லது 14 சதவீதத்தினால் அதிகரித்தமை மொத்த இலாப விகிதம் 42 சதவீதத்தினால் ஒரே மட்டத்தில் காணப்பட்டமை தொடர்பில் தாக்கமளித்திருந்தது.

(ஈ) முன்னைய ஆண்டின் மற்றும் மீளாய்வாண்டின் போது நடைமுறை விகிதம் முறையே 1.7 மற்றும் 1.37 ஆன பெறுமதியை கொண்டிருந்தது. அதற்கமைய சபையின் நடைமுறை சொத்து விகிதம் உச்ச மட்டத்தில் காணப்படுவதாக அவதானிக்கப்படாமையால் மீளாய்வாண்டின் போதும் செயற்படு மூலதன முகாமைத்துவம் தொடர்பில் சபையின் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் அவதானிக்கப்படவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) சபையினால் 2018 ஆம் ஆண்டினுள் நடாத்தப்பட்ட 11 விற்பனை முகவர் கூட்டங்களுக்கு உள்ளபடியாக பங்குபற்றிய எண்ணிக்கை 2,346 ஆக உள்ள போதிலும், 2,639 பேருக்கு பகல் போசனம் வழங்குவதற்காக ரூபா 6,001,820 செலுத்தப்பட்டிருந்தமையின் காரணத்தால் 293 பேருக்காக ரூபா | அங்கத்தவர்களின் குடும்பத்தினரும் பங்குபற்றுகின்றமையால் மேலதிக கிரயமொன்றினை மேற்கொள்ள நேர்ந்தமை. | திட்டவட்டமான கொள்கையொன்று நிறுவப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | 593,670 கூடுதலான கிரயமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | விற்பனை முகவர் கூட்டங்களுக்கு பங்குபற்றியவர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக பொருட்களை பெற்றுக்கொள்வதற்காக ரூபா 2,625,000 ஆன தொகையொன்று அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், ரூபா 2,969,780 ஆன கிரயமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் ரூபா 344,780 இற்கு மேலதிக கிரயமொன்று மேற்கொண்டிருந்ததாக அவதானிக்கப்பட்டது. | உண்மையான கூறுவிலைகள் சபை மதிப்பிட்ட பெறுமதியை விட கூடிய பெறுமதியொன்றென்பது. | நடைமுறைச் சாத்தியமான அடிப்படையொன்றில் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டியமை. |
| (இ) | தகைமை வாய்ந்த கணக்காளர் ஒருவருடனான போதியளவான பதவியணியொன்று பதவியணியினுள் உள்ள போது சபையினால் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்குரிய வருமான வரி, பெறுமதி சேர் வரி, தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி மற்றும் உழைக்கும் போதே செலுத்தும் வரி ஆகியவற்றை கணிப்பிடுவதற்காக தனியார் கம்பனியொன்றின் சேவையினை பெற்றுக்கொள்வதற்காக ரூபா 1,095,000 ஆக செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. | 2017 செப்தம்பர் 26 ஆந் திகதி இடம்பெற்ற முகாமைத்துவ கூட்டங்களின் போது வரி மதியுரை சேவையினை பெற்றுக்கொள்ளல் தொடர்பில் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. | வருமான வரி கணிப்பீட்டிற்கு நிறுவனத்தினுள் திட்டவட்டமான கொள்கையொன்று தயாரிக்கப்பட வேண்டும். |

**3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | முன்னாள் தலைவரால் முகவர் நிறுவனத்திலிருந்து பொறுப்பேற்கப்பட்டிருந்த பெறுமதி ரூபா 8,095,000 பெறுமதியான டபள் கப் வண்டி சபையின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும், சபையினால் பணம் செலுத்தப்படாமையின் அடிப்படையில் சபைக்கு எதிராக வழக்கு தொடுக்கப்பட்டிருந்தது. 2018 நவம்பர் 26 ஆந் திகதியில் உள்ளபடியான செலவிடப்பட்ட மொத்த சட்டச் செலவினம் ரூபா 2,349,185 ஆக இருந்ததுடன், அதற்கமைய வாகனத்தின் பெறுமதிக்கு மற்றும் சட்டரீதியான | இந்த வாகனம் சபையின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்தமை யால் உரிய பெறுமானத் தேய்வு ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டுள் ளது. | சபையின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்தமையா ல் வாகனத்தின் பெறுமதி உரிய நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிராமையின் அடிப்படையில் அந்த நிதி மற்றும் பௌதீக வட்டியினையும் செலுத்த |

| | | | |
|---|---|---|---|
| | வட்டியாக முகவர் நிறுவனத்திற்கு ரூபா 16,190,000 தொகை செலுத்த நேர்ந்திருந்தது. மேலும், இந்த வாகனம் சபையின் எவ்வித தொழிற்பாட்டு பணிக்கு பங்களிப்பு செய்யாது பெறுமானத்தேய்வு செலவினமாக ரூபா 8,095,000 தொகை இலாபத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய இந்த வளாகத்திற்காக சபைக்கு செலவிட நேர்ந்த மொத்த நட்டமானது ரூபா 26,634,185 ஆக இருந்தது. அதன் காரணமாக சபை அதிகாரச்சட்டத்தின் 11(1)(அ) பிரிவின் பிரகாரம் சனாதிபதி நிதியத்திற்கு அனுப்பப்பட வேண்டிய பங்களிப்பு ரூபா 26,634,185 இனால் குறைவடைந்திருந்ததாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | | நேர்ந்துள்ளது. அதனால் சொத்துக்களின் முகாமைத்துவம் தொடர்பில் உயர் முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பது. |
| (ஆ) | விற்பனை சந்தைப்படுத்தல் பணிகளுக்காக கண்காட்சி வண்டியாக பதிவு செய்யப்படாத வாகனங்கள் பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும், கோடிபதி ஷனிதா புதுவருட விசேட லொத்தருக்காக நாளொன்றிற்கு ரூபா 2,500 வாடகையின் அடிப்படையில் 15 வேகன் ஆர் வண்டிகள் மற்றும் ஷனிதா வாசனா New year Dream விசேட லொத்தருக்காக நாளொன்றிற்கு ரூபா 5,000 செலுத்தும் அடிப்படையில் Honda Vezel வாகனமொன்றும் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும், 16 வாகனங்களுக்காக வாடகையாக ரூபா 645,900 தொகை செலுத்தப்பட்டிருந்தது. மேலும் அந்த கண்காட்சி காலப்பகுதியினுள் வாகனத்தில் பொறுப்பினை உரிமையாளர் ஏற்க வேண்டிய போதிலும், Hoda Vezel வாகனம் விபத்திற்கு உள்ளாமையின் காரணமாக ரூபா 80,900 தொகையான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. முறையற்ற விதத்தில் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த இந்த வாகனத்தின் விபத்து தொடர்பில் எவ்வித விசாரணையும் மேற்கொள்ளாது சபையினால் இந்த செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | இணங்குகின்றேன். எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாதிருக்க நடவடிக்கை எடுக்கப்படும். | கண்காட்சி வண்டியாக பதிவு செய்யப்படாத வாகனங்கள் பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும், வெளிப்படைத் தன்மையுடன் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. விபத்து ஏற்பட்ட விதம் தொடர்பில் முறையான விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டு ஏற்பட்ட நட்டத்தினை உரிய தரப்பினரிடமிருந்து அறவிடப்பட வேண்டியமை. |
| (இ) | லொத்தர் சீட்டுக்கள் வெற்றிகளுக்காக பரிசுகளாக வழங்குவதற்கு கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 4,035,160 பெறுமதியான 2 மோட்டார் வாகனங்கள் மற்றும் ரூபா 219,500 தொகையான மோட்டார் சைக்கிளொன்று விற்பனைப் பிரதிநிதிகளின் கோரிக்கையின் அடிப்படையில் கண்காட்சிக்காக வழங்கப்பட்டிருந்ததுடன், அந்த 02 வாகனங்களும் விபத்திற்கு உள்ளாகியிருந்தன. 02 மோட்டார் வாகனங்களும் விபத்திற்கு உள்ளானமையின் அடிப்படையில் ரூபா 228,855 ஆன நட்டமொன்று ஏற்பட்டிருந்ததுடன், மோட்டார் சைக்கிளின் நட்டம் 2019 மே 15 ஆம் கணக்காய்வு திகதி வரையிலும் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. பரிசுகளாக வழங்குவதற்கிருந்த இந்த வாகனங்களின் காட்சிப்படுத்தல் காலப்பகுதியினுள் வாகனங்களின் பாதுகாப்பு பிரதிநிதிகள் நேரடியாக பொறுப்புக்கூற | இணங்குகின்றேன். எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாதிருக்க நடவடிக்கை எடுக்கப்படும். | பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினரிடமிருந்து நட்டத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| வேண்டியதுடன், இவ்வாறான விபத்தொன்று ஏற்படும் போது அது தள உத்தியோகத்தர்களால் சபைக்கு அறிவித்து காப்புறுதி நிறுவனத்திடமிருந்து நட்டத்தினை மீளளிப்பு செய்ய வேண்டும். எனினும், அது தொடர்பில் உயர் மட்ட முகாமைத்துவத்தினால் முறையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினரிடம் அறவிடப்படாது சபையினால் நட்டம் ஏற்பட்டிருந்தது. | | |
| (ஈ) கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்ட விடயங்களுக்கமைய 2013 ஆகஸ்ட் 17 ஆந் திகதி ரூபா 411,500 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்ட முச்சக்கர வண்டியொன்று (செஸி இலக்கம் XMD2A25B2XDWC71820X) விற்பனை முகவர் ஒருவரின் கோரிக்கையின் அடிப்படையில் கண்காட்சி வண்டியொன்றாக வழங்குவதற்கு விற்பனை பிரிவினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. 2015 திசெம்பர் 28 ஆந் திகதி வழங்கப்பட்ட இந்த வாகனம் 2017 நவம்பர் 29 ஆந் திகதி சபைக்கு மீள கையளிக்கப்பட்டிருந்தது. எனினும், அது பதிவு செய்யப்பட்டாத ஒன்று என்பதுடன், அந்த ஒப்படைக்கப்பட்ட சந்தர்ப்பம் அளவில் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட முடியாத நிலைக்கு உள்ளாகியிருந்தது. சொத்துக்களின் பாதுகாப்பு தொடர்பில் முகாமைத்துவத்தினால் எவ்வித கவனமும் செலுத்தப்பட்டிருக்காததுடன், சபைக்கு கையளிக்கப்பட்டு 18 மாதங்கள் கடந்துள்ள போதிலும், எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாது தொடர்ந்தும் பயன்படுத்தப்படாது வளாகத்தினுள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | இந்த முற்சக்கர வண்டியை விற்பனை செய்து சனாதிபதி நிதியத்திற்கு பணம் வழங்குவதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொண்டு அமைச்சரவையின் அங்கீகாரத்திற்காக முன்வைக்கப்பட்டுள்ளதுடன், அங்கீகாரம் கிடைத்த பின்னர் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆயத்தமாக உள்ளது. | பதிவு செய்யப்படாத வாகனமொன்றானமையால் கைத்தவிர்ப்பதற்கு சிக்கலான நிலைமையொன்று ஏற்படுவதால் பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினரை இனங்கண்டு நட்டத்தை அறவிட<br><br>நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.3 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

1997 இன் 20 ஆம் இலக்க அபிவிருத்தி லொத்தர் சபை அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் நோக்கங்கள் பின்வருமானு ஆகும்.

- சனாதிபதி நிதியத்திற்கு பணம் சேகரிக்கும் பணிக்காக லொத்தர்களை நடாத்துதல் அல்லது அதற்காக செயற்படல்.
- அவ்வாறு கிடைத்த பணத்தை சனாதிபதி நிதியத்திற்கு அனுப்பி வைத்தல்.

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) சபையினால் சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ள 10 டிக்கட்டுகளில் 07 இனதும் வருமானம் 2017 ஆம் ஆண்டிற்கு | விற்பனை குறைவான லொத்தர் சீட்டிழுப்பு நாட்கள் குறைவடைந்திருந்தமை இதற்காக | முறையான சந்தைப்படுத்தல் முறைமைகள் பயன்படுத்தப்பட்டு விற்பனையை மேம்படுத்த |

| | | | |
|---|---|---|---|
| | ஒப்பாக வீழ்ச்சியடைந்திருந்ததாக அவதானிக்கப்பட்டது. 2017 ஆம் ஆண்டின் போது இந்த ஏழு ரிக்கெட்டுகளின் விற்பனை வருமானம் ரூபா 9,525,778,900 ஆக இருந்ததுடன், 2018 ஆம் ஆண்டில் அந்த வருமானம் ரூபா 8,253,932,700 வரை ரூபா 1,271,846,200 இனால் வீழ்ச்சியடைந்திருந்தது. அதற்கமைய இந்த ஏழு டிக்கெட்டுகளின் விற்பனை வருமானம் 0.3 சதவீதம் முதல் 50.9 சதவீதம் வரையான வீச்சினுள் வீழ்ச்சியடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | தாக்கமளித்திருந்தது. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |
| (ஆ) | சபையின் 6 டிக்கெட்களின் வரிக்கு முன்னரான இலாபம் 2017 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக வீழ்ச்சியடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. இந்த ஆறு டிக்கட்களின் 2017 ஆம் ஆண்டிற்கான வரிக்கு முன்னரான இலாபம் ரூபா 1,491,511,027 ஆக இருந்ததுடன், 2018 ஆம் ஆண்டிற்கான வரிக்கு முன்னரான இலாபம் ரூபா 1,281,674,846 ஆகும். இதற்கமைய முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக வரிக்கு முன்னரான இலாபம் ரூபா 209,836,181 இனால் வீழ்ச்சியடைந்திருந்ததுடன், அது டிக்கட்டுகளிடையே 5.1 சதவீதம் முதல் 60.9 சதவீதம் வரை பரவியிருந்தது. | மேற்குறிப்பிடப்பட்ட காரணங்களினால் வரிக்கு முன்னரான இலாபமும் குறைவடைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | விற்பனை மேம்படுத்தல் முறைமைகளினூடாக இலாபத்தினை அதிகரித்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |
| (இ) | முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது ஜயோதா மற்றும் நியத்த ஜய ஆகிய இரு டிக்கட்களின் விளம்பர செலவினம் முறையே 16.4 சதவீதத்தால் மற்றும் 64.1 சதவீதத்தால் அதிகரித்திருந்த போதிலும், அவற்றின் விற்பனை வருமானம் முறையே 0.3 சதவீதத்தினால் மற்றும் 10.2 சதவீத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது. மேலும், கெலெக்ஸி ஸ்டார் டிக்கெட்டின் விளம்பர செலவினம் 8.7 சதவீதத்தால் வீழ்ச்சியடையும் போது விற்பனை வருமானம் 50 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. அவ்வாறே சங்வர்த்தன வாசனாவின் மற்றும் உடனடி டிக்கெட்டுகளின் விளம்பர | 2017 ஆம் ஆண்டின் போது விளம்பரத்திற்காக குறைவான கவனம் செலுத்தப்பட்டிருந்தமையால் 2018 ஆம் ஆண்டின் போது அது அதிகரித்திருந்தது. | செயலாற்றலினை இலக்காகக் கொண்டு கட்டுப்பாட்டு முறைமைகளை நிறுவுதல். |

| | | | |
|---|---|---|---|
| | செலவினம் 85.7 சதவீதத்தினால் மற்றும் 38.8 சதவீதத்தால் அதிகரிக்கும் போது விற்பனை வருமானமானது முறையே 12.5 சதவீதத்தால் மற்றும் 3 சதவீதத்தால் மாத்திரமே அதிகரித்திருந்தது. | | |
| (ஈ) | 2018 ஆம் ஆண்டின் போது சந்தை ஆராய்ச்சிகளுக்காக விடய இலக்கம் 16-0006 இன் கீழ் ரூபா 2.5 மில்லியனான தாகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், திருத்தப்பட்ட மதிப்பீட்டினூடாக அந்த நிதியேற்பாடு மேலும் ரூபா 50,000 இனால் அதிகரிக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், மீளாய்வாண்டின் போது சந்தை ஆராய்ச்சிகளை மேற்கொண்டிராததுடன், ரூபா 2.55 மில்லியனான நிதியேற்பாடுகள் நிதியாண்டின் இறுதியில் முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தன. | பந்தியுடன் இணங்குவதாக. | அடையக்கூடிய இலக்குகளை உள்ளடக்கி பாதீடு தயாரிக்கப்பட வேண்டியமை. |
| (உ) | 2018 ஆம் ஆண்டின் பாதீட்டினூடாக ரூபா 25 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டு நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டிருந்த Modern Lottery Shops 25 நிர்மாணிக்கும் செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்ததாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | உத்தேசிக்கப்பட்ட இடங்கள் விற்பனை முகவர்களிடம் இல்லாதிருந்தமை மற்றும் கிடைக்கும் பிரதிபலன்கள் எதிர்பார்த்த மட்டத்தினை அடையாமை. | அடையக்கூடிய இலக்குகளை உள்ளடக்கி பாதீடு தயாரிக்கப்பட வேண்டியமை. |
| (ஊ) | சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்களுக்கு அவர்களின் கடமைகளுக்காக தனிப்பட்ட வாகனத்தை ஈடுபடுத்துவதற்காக ஒரு கிலோ மீட்டருக்கு ரூபா 40 படியான கொடுப்பனவொன்று செலுத்தப்பட்டிருந்த போதிலும், ஈடுபடுத்தப்படும் வாகனம் தொடர்பான விபரங்கள் உள்ளடக்கப்பட்ட ஆவணமொன்று சபையில் இல்லாதிருந்ததுடன், வாகன இலக்கம் மாத்திரம் சபையிடம் காணப்பட்டது. தனிப்பட்ட வாகனங்களை ஈடுபடுத்தி கடமைகளை நிறைவேற்றியமைக்காக ரூபா 2,623,260 தொகையான படியொன்று செலுத்தப்பட்டிருந்த போதிலும், | பந்தியுடன் இணங்குவதாக. | குறிப்பான நடைமுறையொன்றின்கமைய செலவினங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | சபைக்கு அறிவிக்கப்பட்டிருந்த வாகனம் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டதா என்பது மற்றும் ரூபா 40 படியான கொடுப்பனவு தீர்மானிக்கப்பட்டது. எந்த ரகத்திலான வாகனத்திற்காக என்பதை திட்டவட்டமாக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | | |
| (எ) | 2018 ஆம் ஆண்டின் மொத்த டிக்கெட்டுக்களின் அச்சீட்டு செலவினம் ரூபா 326,382,842 ஆக இருந்ததுடன், விற்பனை செய்யப்படாது எஞ்சியுள்ள டிக்கட்டுக்களின் அச்சீட்டு செலவினம் ரூபா 37,169,426 ஆகும். அதற்கமைய எஞ்சிய டிக்கட்டுக்களின் அச்சீட்டு செலவினம், மொத்த செலவினத்தின் 11.34 சதவீதம் ஆகும். நடப்பாண்டில் ரூபா 20,850,283 பொருளாதார செலவினமொன்றாக ஏற்க நேர்ந்துள்ளதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | 30 நாட்களுக்கு முன்னர் கட்டளையிடல், லொத்தர் டிக்கட்கள் விற்பனை செய்யப்டாமை, மழையின் காரணமாக கடமைக்கு சமூகமளிக்காமை போன்ற காரணங்களின் அடிப்படையில் விற்பனை செய்ய முடியாது போயிருந்ததுடன், விற்பனை செய்யப்படாத டிக்கட்களை 5 சதவீதமான அளவில் வைத்துக்கொள்வதற்காக கள விற்பனை அணி பகிர்ந்தளிக்கும் விற்பனை முகவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. | போதியளவான உள்ளக கட்டுப்பாட்டு நடைமுறைகள் உருவாக்கப்பட வேண்டியமை. |

## 3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சபையினால் 2018 ஏப்ரல் 05 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட வாகன கைத்தவிர்ப்பு நடைமுறைக்கு கேள்வி ஆவணங்களை வெளியிடும் போது பெற்றுக்கொள்ளப்பட்ட வைப்புத் தொகையான ரூபா 160,500 தொகை மற்றும் 2 வாகனங்களின் கைத்தவிர்ப்பின் மூலம் கிடைத்த ரூபா 5,400,000 தொகை நிர்வாக | பத்திரிக்கை அறிவித்தலின் பிரகாரம் நிர்வாக உத்தியோகத்தர் நடவடிக்கை எடுத்துள்ளதாக. | பணம் தொடர்பில் ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாடொன்றை நிறுவ வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | உத்தியோகத்தர்களுக்கு தனிப்பட்ட ரீதியில் செலுத்தப்பட்டிருந்ததுடன், பின்னர் அவரின் கையொப்பத்துடன் வங்கியிலிடப்பட்டிருந்தது. அதற்கமைய சபையின் பணம் உத்தியோகத்தரிகளின் கையில் பரிமாற்றப்பட்டமை தொடர்பில் உயர் முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிராமை கணக்காய்வின் போது சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கலொன்றாகும். | | |
| (ஆ) | விற்பனை மேம்படுத்தல் உதவியாளர் மற்றும் விற்பனை இணைப்பாளர் எனும் 30 கள உத்தியோகத்தர்கள் பல்வேறு தகைமைகள் மற்றும் பல்வேறு சம்பள படிநிலைகளின் கீழ் ஆட்சேர்க்கப்பட்டிருந்த போதிலும், அவர்கள் ஒரே தன்மையான கடமைகளையே நிறைவேற்றுகின்றனர். அந்த ஒரே கடமைக்காக மீளாய்வாண்டின் போது சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 10,680,829 செலுத்தப்பட்டிருந்தது. | ஒரே தன்மையான கடமைகளையே நிறைவேற்றிய போதிலும், அவர்களின் பொறுப்புகள், மேற்பார்வை பணிகள் ஒன்றுக்கொன்று வேறுபட்டதாகும். | களத்தில் நிலவும் மேற்பார்வை மட்டம் மற்றும் நிறுவனக் கட்டமைப்பின் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட கடமை கையளிப்பு இடம்பெற வேண்டும் என்பது. |
| (இ) | கோடிபதி ஷனிா புதுவருட விசேட லொத்தருக்காக விற்பனை சந்தைப்படுத்தல் பணிகளுக்காக கண்காட்சி வண்டியாக பதிவு செய்யப்படாத வாகனங்கள் பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும், வாடகையின் அடிப்படையில் பழைய வாகனங்கள் 15 பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், அதற்காக 2018 மாரச் 20 ஆந் திகதி முதல் ஏப்ரல் 10 ஆந் திகதி வரையிலும் நாளொன்றிற்கு ரூபா 1,500, ரூபா 2,000, ரூபா 2,200 மற்றும் ரூபா 2,500 எனும் பல்வேறு வாடகைகளின் கீழ் முறையான அங்கீகராமின்றி கண்காட்சி வாகனங்களாக பயன்படுத்தப்பட்டு அதற்காக ரூபா 645,900 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | வழங்கல் நிறுவனத்தின் கண்காட்சிக்காக மேலதிக வாகனங்களின் இருப்பொன்று இல்லாதிருந்தமையால் பதிவு செய்யப்பட்ட வேகன் ஆர் வண்டிகள் பயன்படுத்தப்பட்டதாக. | பரிசுகள் தொடர்பிலான உள்ளக கட்டுப்பாடொன்றை தாபித்தல். |

| | | | |
|---|---|---|---|
| | வெற்றியாளர்களை ஏமாற்றும் விதத்தில் பழைய வாகனங்களை கண்காட்சிக்காக பயன்படுத்தப்பட்டிருந்தமை சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கலொன்றாகும். | | |
| (ஈ) | கோடிபதி ஷனிதா புதுவருட விசேட லொத்தர் சீட்டிழுப்பினை நடாத்துவதற்காக 2018 மார்ச் 13 ஆந் திகதி இடம்பெற்ற பணிப்பாளர் சபை கூட்ட அறிக்கை இலக்கம் 2018/03/1247 இல் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கோரப்பட்டிருந்த போதிலும், அதற்காக அங்கீகாரம் கிடைத்திருந்தது 2018 மே 10 ஆந் திகதி இடம்பெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்திலாகும். எனினும் லொத்தர் நிகழ்ச்சித்திட்டம் 2018 ஏப்ரல் 10 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய முறையான அங்கீகாரமொன்று கிடைக்காது இந்த விசேட சீட்டிழுப்பினை ஆரம்பித்தமை சர்ச்சைக்குரிய விடயமொன்றாகும். | கருத்து தெரிவித்திருக்கவில்லை. | பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினை பெற்ற பின்னர் நடவடிக்கை எடுத்தல். |
| (உ) | சீட்டிழுப்பு சந்தர்ப்பத்தில் விற்பனை செய்யப்பட்ட லொத்தர் சீட்டுக்களாக கருதப்பட்ட பெறுமதியிலான ரூபா 5,559,820 தொகை சீட்டிழுப்பின் பின்னர் விற்பனை செய்யாது மீள திருப்பியனுப்பப்பட்ட லொத்தர் சீட்டுக்களாக அந்த பெறுமதி விற்பனை பெறுமதியிலிருந்து கழிக்கப்பட்டு காண்பிக்கப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கலொன்று ஆகும். | விற்பனைகள் மீள அனுப்பப்பட்டமைக்கு காரணமாக அமைந்துள்ளது தெல்தெனிய பிரதேசத்தில் அவசரமாக இடம்பெற்ற பாதகமான நிலமை மற்றும் செலவின விடயங்களின் பெறுமதி மாற்றமடைந்துள்ளது கணிப்பீட்டிலான தவறுதல் ஒன்றினால் ஆகும். | • தற்போது பேணிச்செல்லப்படாத பொதுப் பேரேட்டினை பேணுவதற்கு கட்டுப்பாட்டு முறையொன்றினை அறிமுகம் செய்தல்.<br>• சீட்டிழுப்பு நிகழ்ச்சிகளை சரியாக நடைமுறைப்படுத்தல்.<br>• நிதி அறிக்கைகள் மற்றும் மாதாந்த அறிக்கைகளின் வேறுபாடுகளுக்காக இணக்கக்கூற்றுகள் முன்வைக்கப்படல். |

## 3.5 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| ஓட்ட நிலையிலுள்ள ரூபா 2,720,587 பெறுமதியான 16 மோட்டார் வண்டிகள் 03 முதல் 01 வருடத்திற்கு இடைப்பட்ட காலமாக பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது களஞ்சியத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. 2017 ஆம் ஆண்டில் ரூபா 233,000 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்ட 2018 சனவரி மாதமளவில் சுமார் 25,000 கிலோமீட்டர்கள் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள மோட்டார் வண்டியொன்றும் இதில் உள்ளடங்கும். விற்பனை சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்கள இணைத்துக்கொள்ளப்பட்ட பின்னர் அவர்களுக்கு இந்த மோட்டார் சைக்கள்கள் வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அவர்களுக்கு வழங்குவதற்காக ரூபா 1,631,400 பெறுமதியான 06 மோட்டார் சைக்கிள்கள் 2019 மார்ச் 19 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | 16 மோட்டார் வண்டிகளை கைத்தவிர்ப்பதற்கான அனுமதிக் கடிதமொன்று நிதி அமைச்சிற்கு முன்வைக்கப்பட்டுள்ளது.<br><br>சுமார் 25,000 கிலோமீட்டர்கள் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள மோட்டார் வண்டி பாவனைக்கு பொருந்தாததென குறிப்பிடப்பட்டிருந்தது. மோட்டார் சைக்கிளொன்று ஆர்சேர்ப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள விற்பனை உதவியாளர் ஒருவருக்கு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. | தேவைப்பாட்டினை உரிய முறையில் மதிப்பீடு செய்து உரிய நடைமுறைகளுக்கமைய சொத்துக்களை கொள்வனவு செய்தல். |

## 3.6 பெறுகைகள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| (அ) <u>பெறுகையிலான தாமதங்கள்</u><br>டிக்கட்களை கொண்டு செல்வதற்காக க்ரூ கெப்களை கொள்வனவு செய்வதற்காக 2018 பெப்ரவரி 19 ஆந் திகதி கூறுவிலைகள் திறக்கப்பட்டு மார்ச் 15 ஆந் திகதி ரூபா 5,565,000 தொகைக்கு கட்டளையிடப்பட்ட வாகனம் 2018 யூன் 13 ஆந் திகதி விளம்பர வண்டியொன்றாக நிர்மாணிப்பதற்காக திட்டமொன்றில்லாது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும், அதற்காக ரூபா 1,990,000 ஆன | டிக்கட்களை கொண்டு செல்வதற்காக இரண்டு க்ரூ கெப்களை கொள்வனவு செய்திருந்த போதிலும், ஒரு வண்டியை விற்பனை மேம்படுத்தல் வண்டியாக மாற்றுவதற்காக முகாமைத்துவத்தினால் திட்டமிடப்பட்டது. அதற்கமைய விளம்பர வண்டியை நிர்மாணித்தல் 2 கட்டங்களின் | பாதீட்டு திட்டம் பெறுகைகள் திட்டத்திற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

| | | |
|---|---|---|
| செலவின மதிப்பீடொன்று முன்வைக்கப்பட்டிருந்தது. அதற்கமைய 2018 செப்தம்பர் 25 ஆந் திகதி முதல் இந்த பணி ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2019 மே 15 வரையிலும் அது இடம்பெற்றிருக்கவில்லை. | கீழ் மேற்கொள்ளப்படும். முதலாவது கட்டத்தில் பின் மாதிரியினை வடிவமைப்பதற்கும் இரண்டாவது கட்டத்தில் LED திரை மற்றும் மின்பிறப்பாக்கியை கொள்வனவு செய்தலும் இடம்பெறும். அதனால் சிறிது காலம் கடந்துள்ளது. | |
| **(ஆ) <u>பெறுகைகள் திட்டம்</u>** | | |
| (i) 2006 இன் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4 ஆம் அத்தியாயத்தின் 4.2.1 பந்தியின் பிரகாரம் பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், சபையின் மீளாய்வாண்டிற்கான பெறுகைகள் திட்டத்தினுள் பெறுகை முறைமை (Procurement Method) என்ன என்பது உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | இணங்கவில்லை. பெறுகை முறைமை Bid Calling என குறிப்பிடப்பட்டுள்ளது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் பெறுகை முறைமை குறிப்பிடப்பட வேண்டும். |
| (ii) பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்படும் போது பெறுகைத் தேவைப்பாடு இனங்காணப்பட வேண்டிய போதிலும், சபையின் 2018 ஆம் ஆண்டிற்கான பெறுகைகள் திட்டத்திலான 14 பெறுகைகள், அதாவது ரூபா 166.9 மில்லியனுக்கு அண்மிய பெறுகைகள் 2018 ஆம் ஆண்டினுள்ளும் நடைமுறைப்படுத்தப்பட்டிராததுடன்,அதற்கு புறம்பாக பெறுகைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன. அதற்கமைய, சபையின் முகாமைததுவம் மூலோபாய அறிவுரைகள் மற்றும் நோக்கங்களை கருத்திற்கொள்ளவும் பெறுகைத் தேவைப்பாடுகளை உரிய முறையில் இனங்காணுவதற்கும் தவறியிருந்தது. | அவதானிப்புகளுடன் இணங்குகின்றேன். பெறுகைகள் திட்டத்தினுள் உள்ளடக்கப்படாத பெறுகைகளுக்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாகவும், சந்தையில் நிலைத்து நிற்பதற்கு ஏனைய போட்டி நிறுவனங்களின் மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களின் காரணமாக இவ்வாறு இடம்பெற்றுள்ளதாக. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (iii) பெறுகைகள் திட்டத்தின் பிரகாரம் 30,000 குடைகளை கொள்வனவு செய்ய திட்டமிடப்பட்டிருந்ததுடன், 2018 ஆம் ஆண்டினுள் 37,800 குடைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அதற்கமைய அங்கீகரிக்கப்பட்ட எல்லையினை விஞ்சி ரூபா 2,950,428 | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் பெறுகை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையினை சரியாக புரிந்துகொண்டு பெறுகைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| பெறுமதியான 7800 குடைகளை கொள்வனவு செய்வதற்கான அங்கீகாரம் மற்றும் தேவைப்பாடு கணக்காய்விற்கு உறுதிப்படுத்தப்படவில்லை. | | |
| **(இ) <u>சந்தைப்படுத்தல் முகவர் நிறுவனத்தை தெரிவு செய்தல் ரூபா 196,776,045</u>** | | |
| (i) பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.3.13 (அ) பந்தியின் I அல்லது II மாற்றுவழிகளுக்கமைய கேள்வி முறிகளின் பெறுமதி மதிப்பிடப்பட்டு ஒப்பந்த பெறுமதியான ரூபா 196,776,045 இன் சதவீதமாக தீர்மானிக்கப்பட வேண்டும். அதற்கமைய தீர்மானிக்கப்பட வேண்டிய தொகை ரூபா 1,697,760 ஆன போதிலும், ரூபா 4,378,000 அறவிடப்பட்டமையால் ரூபா 2,680,240 பெறுமதியானது குறித்த நிறுவனங்களிடமிருந்து கூடுதலாக அறவிடப்பட்டிருந்தது. அது தொடர்பில் நிதி அமைச்சினால் நியமிக்கப்பட்ட பெறுகைகள் குழுவின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.<br>2016/2017 ஆண்டுகளில் விளம்பர முகவர் நிறுவனங்களை தெரிவு செய்யும் போது காணப்பட்ட 03 வருட அனுபவம் காணப்பட வேண்டும் எனும் விதி 2016/2017 ஆண்டுகளுக்குரிய ஒரு வருட அனுபவம் வரை குறைக்கப்பட்டுள்ளமையும் அமைச்சரவை பெறுகைகள் குழுவினால் மேற்கொள்ளப்பட வேண்டிய இந்த பெறுகை திணைக்கள பெறுகைகள் குழுவினால் மேற்கொள்ளப்பட்டமையால் விளம்பர முகவர் நிறுவனங்களை தெரிவு செய்யும் போது பெறுகை உரிய முறையில் இடம்பெற்றுள்ளதாக அவதானிக்கப்படவில்லை. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் செயற்படுவதாக மற்றும் 03 வருட அனுபவத்திற்கு பதிலாக ஒரு வருட அனுபவம் போதுமானது என நிபந்தனைகள் மாற்றப்பட்டமைக்கு புதிய சிந்தனைகளுடனான புத்தாக்கமுடைய நிறுவனங்களின் பங்களிப்பினை பெற்றுக்கொள்ளல் பொருத்தமானது என திணைக்கத்தின் பெறுகைகள் குழுவின் அங்கத்தவர்கள் தீர்மானித்தமையால் ஆகும். | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளுக்கமைய செயற்பட வேண்டும் என்பதுடன், பெறுகை வழிகாட்டல் ஏற்பாடுகளுக்கமைய திணைக்களத்தின் பெறுகைகள் குழுவின் அங்கத்தவர்கள் தீர்மானிக்கப்பட வேண்டும். |
| (ii) விளம்பர முகவர் நிறுவனமொன்று தெரிவு செய்வதற்கான 2016/2017 காலப்பகுதிக்குரிய விளம்பர பெறுகை பணியொன்று 2017 யூலை 31 ஆந் திகதி நிறைவடைந்தவுடன், 2017/2018 காலப்பகுதிக்குரிய விளம்பர பெறுகை பணி 2018 சனவரி 16 ஆந் திகதி | பெறுகை கால அட்டவணைக்கமைய நடவடிக்கை எடுப்பதாக. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளுக்கமைய செயற்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | ஆரம்பித்துள்ளது. அதற்கமைய பெறுகை நடைமுறையொன்று இல்லாத 05 மாத காலப்பகுதிக்கான விளம்பர பணிகளுக்காக ரூபா 16,373,268 தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது. | | |
| (iii) | விளம்பரங்களை பிரசுரிப்பதற்காக 04 முகவர் நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்டிருந்த போதிலும், அவற்றுள் ஒரு நிறுவனம் நியத்தஜய லொத்தர் சீட்டின் விளம்பர நிர்மாணத்திற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், அந்த நிறுவனத்தின் கிரயமானது ஏனைய 03 நிறுவனங்களை விடவும் உயர்வான பெறுமதியை கொண்டிருந்ததாக கிரய மதிப்பீடுகளை ஒப்பிடும் போது அவதானிக்கப்பட்டது. அதற்கமைய சுமார் 02 வருட வியாபார அனுபவமுடைய அதிக கிரயமுடைய நிறுவனமொன்று ஒரு லொத்தரின் விளம்பர நிர்மாணத்திற்காக மாத்திரம் தெரிவு செய்தல் கணக்காய்வின் போது பிரச்சினைக்குரிய விடயமாக அமைந்தது. | இரட்டை உறை முறைமையின் பிரகாரம் புத்தாக்க சிந்தனையை அடிப்படையாக கொண்டு மாத்திரம் விளம்பர முகவர் நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. | - மேற்படி - |
| **(ஈ)** | **<u>பரிசுகளை கொள்வனவு செய்தல் (கோடிபதி ஷனிதா) ரூபா 27,300,000</u>** | | |
| (i) | கோடிபதி ஷனிதா லொத்தருக்கான பரிசாக வேகன் ஆர் வாகனங்கள் (Brand New) 05 இனை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன், பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3.5 ஆம் பந்தியில் மாத்திரம் கூறுவிலைகளை கோரி கொள்வனவு செய்யப்பட வேண்டிய போதிலும், தனியான வாகன விற்பனை (Car Sale) மூலம் கூறு விலைகள் கோரப்பட்டு பயன்படுத்தப்பட்ட (Recondition) வாகனங்கள் 05 ரூபா 17.5 மில்லயனுக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. மேலும் பெறுகை வழிகாட்டிக் கோவையின் | டொயோடா லங்கா அந்த ரகத்தினை இறக்குமதி செய்யாததுடன், AMW இருப்பு இல்லை என குறிப்பிடப்பட்டமையால் உள்நாட்டு இறக்குமதியாளர்களிடமிருந்து கூறுவிலைகள் கோரப்பட்டுள்ளன. ஒப்பந்த பெறுமதியை கருத்திற்கொண்டு அதன் அங்கத்தவர்களுக்கு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளுக்கமைய செயற்பட வேண்டியமை. |

| | | |
|---|---|---|
| 2.9.1 ஆம் பந்தியின் பிரகாரம் நேர் முறையின் கீழான கொள்வனவிற்கான பெறுகைகள் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவின் அங்கத்தவர்களுக்கு கொடுப்பனவு செய்ய முடியாத போதிலும், ரூபா 18,000 தொகை உரிய குழு அங்கத்தர்வர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ii) கோடிபதி ஷனிதா கோடிபதி புதுவருட விசேட சீட்டிழுப்பு வெற்றிச் சுற்றுக்கான ரூபா 1.5 மில்லியனான தளபாட பொருட் தொகுதியை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்ட சந்தர்ப்பத்திலேயே Damro எனும் வியாபார பெயர் குறிப்பிடப்பட்டிருந்த காரணத்தால் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 1.2.1(ஈ) பிரிவின் பிரகாரம் தகுதி வாய்ந்த ஏனைய வழங்குனர்களுக்கு நியாயமான மற்றும் சமனான சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைப் பாதீட்டினை தயாரிக்கும் போது னுயஅசழ தளபாடங்களின் விலைமதிப்பீடுகளை அடிப்படையாக கொண்டுள்ள போதிலும், கூறுவிலைகளை கோரும் போது ஏனைய நிறுவனங்களிலிருந்தும் கூறுவிலைகள் கோரப்பட்டுள்ளதாக. | - மேற்படி - |
| **(உ) <u>விற்பனை மேம்படுத்தல் உருப்படிகளை கொள்வனவு செய்தல் ரூபா 14,322,323</u>** | | |
| (i) 03 சந்தர்ப்பங்களில் 35,000 குடைகளை கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன், அந்த விலைக்கேள்வி ஆவணத்தின் 17 ஆம் நிபந்தனைக்கமைய ஒப்பந்தம் கையளிக்கப்பட்ட திகதி முதல் உரிய காலப்பகுதியினுள் பொருட்கள் ஒப்படைக்கப்பட வேண்டியதுடன், அவ்வாறு இல்லையெனின் தாமதக் கட்டணங்கள் அறவிடப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்தது. அதற்கமைய உரிய திகதியில் பொருட்கள் கிடைக்காமையின் அடிப்படையில் ரூபா 418,260 தொகையான தண்டப்பணம் அறவிடப்பட வேண்டிய போதிலும், அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இணங்குகின்றேன். தண்டப்பணம் அறவிடப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (ii) 2018 ஒக்தோபர் 01 ஆந் திகதி முதல் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தேவையான குடைகளின் எண்ணிக்கை 7,500 ஆன போதிலும், 20,000 குடைகள் கட்டளையிடப்பட்டிருந்ததுடன், 2018 | ஒரு போட்டிச் சுற்று முழுமையாக விற்பனை மந்தகதியில் இடம்பெற்றமையில் அடிப்படையில் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் | திட்டங்கள் தயாரிக்கப்பட்டு தேவைக்கு மாத்திரம் பொருந்தக்கூடிய வகையில் |

| | | |
|---|---|---|
| திசெம்பர் 31 ஆந் திகதியளவில் அவற்றுள் 11,900 குடைகள் மாத்திரம் கிடைத்திருந்தது. எஞ்சிய 8,100 குடைகள் 2019 ஏப்ரல் 11 ஆந் திகதி வரையிலும் சபைக்கு கிடைத்திருக்கவில்லை. மேலும், ரூபா 2,541,151 பெறுமதியான 6,718 குடைகள் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக களஞ்சியத்தில் எஞ்சியிருந்தது. | உள்ளபடியாக அனைத்து குடைகளையும் சந்தைக்கு வெளியிடுவதற்கு முடியாது போனமையும், உடனடி லொத்தர் சீட்டுகள் மூலோபாய நடைமுறையொன்றினூடாக இடம்பெற்றமையால் சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் இதனை சந்தைக்கு விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | பொருட்கள் கொள்வனவு செய்யப்பட வேண்டியமை. |
| (iii) கேள்வி நிபந்தனை இலக்கம் 15 இன் பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட வழங்குனருக்கு ஒப்பந்தத்தை கையளிக்கும் திகதி முதல் 10 நாட்களிலும் ஒப்பந்தப் பெறுமதியில் 10 சதவீத பெறுமதியொன்றிற்கான செயலாற்றல் பிணையொன்று வழங்கப்பட வேண்டிய போதிலும், ரூபா 4,299,965 பெறுமதியான 10,000 குடைகள் ஆன கட்டளை தொகையும் 2018 யூலை 10 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்டதன் பின்னர் செயலாற்றல் பிணையொன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | சந்தை கேள்வியினை பூர்த்தி செய்யும் தேவைப்பாட்டின் அடிப்படையில் சில எண்ணிக்கையான குடைகள் செயலாற்றல் பிணையில்லாது களஞ்சியத்திற்கு கொண்டுவர நேர்ந்ததுடன், செயலாற்றல் பிணையினை சபைக்கு வழங்குவதற்கு சில காலம் கடந்துள்ளது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளுக்கமைய செயற்பட வேண்டியமை. |
| **(ஊ) <u>பதவியணிக்காக பகல் உணவினை வழங்குதல் ரூபா 4,819,179</u>** | | |
| 2015 ஆம் ஆண்டு முதல் இதுவரையிலும் பெறுகை நடைமுறையிலிருந்து முழுமையாக விலகி சபையின் பதவியணிக்காக பகல் உணவினை வழங்குவதற்காக வழங்குனர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் 2018 ஆம் ஆண்டினுள் அதற்காக ரூபா 4.8 மில்லியனுக்கும் அதிகமான தொகை செலுத்தப்பட்டிருந்தது. | கூறுவிலைகளை கோரி பொருத்தமான வழங்குநர் ஒருவரை தெரிவு செய்ய நடவடிக்கை எடுப்பதாக. | - மேற்படி - |
| **(எ) <u>Fork Lift ஒன்றினை கொள்வனவு செய்தல் ரூபா 4,500,000</u>** | | |
| கூட்டிணைந்த திட்டத்தினுள் காண்பிக்கப்பட்டிருந்த பகிர்ந்தளிப்பு செயற்திறனை அபிவிருத்தி செய்வதற்காக பாதீட்டினூடாக நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த Fork Lift இயந்திரமொன்றின் தேவைப்பாடு பிரதான களஞ்சியம், உப களஞ்சியம், அல்லது ஏனைய எந்தவொரு பிரிவினாலும் கோரிக்கை | - 2018 ஆம் ஆண்டிற்கான பெறுகைகள் திட்டத்தினூடாக மற்றும் அந்த பெறுமதி பாதிடப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளமை யால் எந்தவொரு பிரிவினாலும் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கவில்லை என்பது பொய்யானதாகும். | - பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.<br>- நிதி அமைச்சினால் |

| | | |
|---|---|---|
| விடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் இந்த கொள்வனவு பெறுகைகள் திட்டத்திற்கமைய அங்கீகரிக்கப்பட்டிராததுடன், ரூபா 4,500,000 செலவிடப்பட்டு Toyota லங்கா நிறுவனத்திடமிருந்து 2018 யூலை 02 ஆந் திகதி அந்த இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. மேலும், அமைப்புக்குறிப்பீடுகள் கிடைக்காமை, தொழில்நுட்ப மதியுரையாளரின் பரிந்துரை கிடைக்காதும் நிதி அமைச்சினால் நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அங்கத்தவர் ஒருவர் இல்லாது தொழில்நுட்ப மதிப்பாய்வினை மேற்கொள்ளல், கொள்வனவு செய்வதற்கு பொருத்தமான பெறுமதிகள் பரிந்துரை செய்யப்பட்டிராமை, உரிய அங்கீகாரமின்றி ரூபா 25,000 செலவினம் மேற்கொள்ளப்பட்டு மதியுரை சேவையொன்றை பெற்றுக்கொள்ளல் போன்றவையாக பெறுகைகள் நடைமுறையிலிருந்து விலகி இந்த பணி மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறே கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்டது இவ்வாறானதொரு இயந்திரமொன்றை பயன்படுத்துவதற்கு களஞ்சியத்தினுள் மற்றும் சபையின் வளாகத்தினுள் போதியளவான வசதிகள் இல்லாதிருந்தது என்பதாகும். | - டொயோட்டா லங்கா நிறுவனம் உள்நாட்டு நிறுவனமொன்றானமையால் அந்த பெறுகை பெறுகைகள் குழுவின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.<br>- மோட்டார் வாகனத் திணைக்களத்தின் உத்தியோகத்தர் ஒருவரை தொடர்புகொள்ள முடியாதிருந்தமையால் மற்றுமொரு மதியுரையாளரின் மதியுரை சேவையினை பெற்றுக்கொண்டதாக.<br>- தொழில்நுட்ப மதியுரையாளரின் அறிக்கை கிடைத்துள்ளதாக.<br>- மதியுரையாளரால் கோரப்பட்ட ரூபா 25,000 இற்காக முகாமைத்துவத்தினால் பின்னர் அனுமதி வழங்கப்பட்டதாக. | நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவின் அங்கத்தவர்கள் தொடர்புகொள்ளப்பட வேண்டும்.<br>- பணிக்குரிய பிரிவுகளால் உரிய தேவைப்பாடு இனங்காணப்பட்டு அதன் பின்னர் பணிப்பாளர் சபையின் பத்திரங்களை முன்வைத்து பணிப்பாளர் சபை தீர்மானங்களாக உரிய அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். |
| (ஏ) **<u>க்ரூ கெப்களை கொள்வனவு செய்தல் ரூபா 12,555,000</u>** | | |
| (i) விற்பனை சந்தைப்படுத்தல் வாகனத்திற்காக மேற்கொள்ளப்பட்ட பெறுகை நடைமுறையின் போது மதியுரையாளர் ஒருவரால் தேவையான தொழில்நுட்ப அறிவுரைகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும், பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 7.3.1 அத்தியாயத்தின் பிரகாரம் குறித்த நிறுவனத்தை தெரிவு செய்ய காரணமாக அமைந்த விடயங்கள் உள்ளடக்கப்பட்ட மதியுரையாளரின் அறிக்கை பெறுகைகள் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | விலை வாசிப்பினை மதிப்பீடு செய்வதற்காக மதியுரை உதவி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. பரிந்துரைகள் கோவையில் உள்ளதாக. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளுக்கமைய செயற்பட வேண்டியமை. |
| (ii) பெறுகைகள் வழிகாட்டிக் | அமைப்புக்குறிப்பீடுகளை | - மேற்படி - |

| | |
|---|---|
| கோவையின் 2.8 (அ) இன் பிரகாரம் விடயம் தொடர்பான நிபுணர் ஒருவரின் மற்றும் பெறுகை நடைமுறை தொடர்பான அறிவுடைய ஒரு அங்கத்தவரேனும் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவில் காணப்பட வேண்டும். எனினும், விற்பனை சந்தைப்படுத்தல் வாகனத்தில் பெறுகைகள் நடைமுறைக்குரியதாக நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவில் அவ்வாறான அறிவுடைய அங்கத்தவர் ஒருவர் இல்லாதிருந்தமையால் விற்பனை சந்தைப்படுத்தல் வாகனத்தினை நிர்மாணிப்பதற்கு மற்றம் LED திரை மற்றும் மின்பிறப்பாக்கியை கொள்வனவு செய்ய நேர்ந்தமையால் பெறுகை நடைமுறை செயற்திறனற்றிருந்தது. | தயாரித்தல் மற்றும் மதிப்பீட்டிற்காக மேலதிக தொழில்நுட்ப உதவியை இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தினூடாக பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன், அதற்கமைய விலைக்கேள்வி கோரப்பட்டு மதிப்பீடு செய்யும் பணிகள் தற்போது இடம்பெறுவதாக. |

## 3.8 ஏனைய அமைப்புகளின் வளங்களை பயன்படுத்தல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| திஸ்ஸமகராம பிரதேச செயலக பிரிவிற்கு சொந்தமான 01 ஏக்கர் அளவான காணி நீண்ட கால குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு உடன்பட்டிருந்த போதிலும், உரிய முறையில் குத்தகை உடன்படிக்கை கைச்சாத்திடப்படாது சுற்றுலா விடுதியொன்றை நிர்மாணிப்பதற்காக அந்த காணியின் அபிவிருத்தி பணிகளுக்காக ரூபா 492,392 தொகை சபையினால் செலவிடப்பட்டிருந்தது. எனினும், அது சுற்றுலா விடுதியொன்றை நிர்மாணிப்பதற்கும் பொருத்தமானது என்பதன் மீண்டும் காணிகளை சுவீகரிக்குமாறு 2018 செப்தெம்பர் 13 ஆந் திகதி திஸ்ஸமஹராம பிரதேச செயலகத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய இதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காது தொடர்ந்தும் சொத்தொன்றாக | இணங்குகின்றேன். எதிர்காலத்தில் கணக்குகளிலிருந்து பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | உரிய ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

காண்பிக்கப்பட்டிருந்தது.

## 3.9 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| (அ) 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினுள் உள்ளடங்காத விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மதியுரையாளர் பதவிக்காக 64 வயதான ஒருவரும், 2019 ஏப்ரல் 30 ஆந் திகதியளவில் பதவியணியின் அங்கத்தவர் அல்லாத 70 வயதை கடந்த நபர் ஒருவர் செயற்திட்ட இணைப்பு உத்தியோகத்தராக ஒப்பந்த அடிப்படையில் 6 மாத காலப்பகுதிக்காக மேலும் 4 பேருடன் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தனர். மேற்படி 60 வயதை கடந்த உத்தியோகத்தர்களை இணைத்துக்கொள்வதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | மதியுரைக்காக மாத்திரம் அமைச்சரவை பத்திரமொன்றை அமைச்சிற்கு முன்வைத்த போதிலும், அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் குறித்த அங்கீகாரங்களை பெற்றுக்கொண்டதன் பின்னர் ஆட்சேர்ப்புகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது. |
| (ஆ) முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை 2006 இன் 30 ஏற்பாடுகளுக்கமைய 2015 திசெம்பர் 16 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடைமுறைக்கமைய சபைக்காக பதவியணியை இணைத்துக்கொள்ளும் போது பத்திரிக்கை அறிவித்தலின் மூலம் அல்லது திறந்த அறிவித்தலின் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டு எழுத்துமூல பரீட்சை அல்லது நேர்முகப் பரீட்சையொன்றின் பெறுபேறுகளின் அடிப்படையில் இணைத்துக்கொள்ளப்பட வேண்டும். எனினம் 2018 சனவரி முதல் யூலை 30 வரையிலும் பல்வேறு பதவிகள் 05 அற்காக பதவியணியின் 18 பேர் திறந்த அறிவித்தலின் மூலம் விண்ணப்பங்கள் கோரப்படாது ஆட்சேர்த்தல் இடம்பெற்றிருந்தது. | எந்தவொரு நிறுவனத்தினதும் தலைவருக்கு சுயமாக வேலைவாய்ப்பினை கோரி விண்ணப்பங்கள் அனுப்ப முடியும் என்பதால் அந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புகள் | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |
| **(இ) <u>உதவி பொது முகாமையாளர் (மனிதவளம் மற்றும் நிர்வாகம்) இணைத்துக்கொள்ளல்</u>** | | |
| (i) இந்த பதவிக்காக 2016 ஆம் ஆண்டில் | நேர்முகப் பரீட்சைகள் உரிய | |

| | | | |
|---|---|---|---|
| | கிடைத்த விண்ணப்பங்களிடையே 27 உம், 2017 இல் 45 விண்ணப்பங்களில் 21 விண்ணப்பங்களுமாக 48 விண்ணப்பதாரிகள் 2018 பெப்ரவரி 12 ஆந் திகதி அழைப்புக் கடிதங்கள் கையொப்பமிடப்பட்டிருந்தன. அவற்றினுள் நேர்முகப் பரீட்சைகளுக்காக 24 பேர் பங்குப்பற்றியிராததுடன், நேர்முகப் பரீட்சைகளுக்காக போதியளவாக காலம் வழங்கப்பட்டிருந்ததாக அவதானிக்கப்படவில்லை. | 2017 திசெம்பர் 15 மற்றும் 17 ஆந் திகதிகளில் நடாத்தப்பட்டிராததுடன், அது 2018 பெப்ரவரி 15 மற்றும் 17 ஆந் திகதிகளில் நடாத்தப்பட்டுள்ளதாகவும், 24 பேர் பங்குபற்றாமைக்கான காரணம் வேறு வேலைகள் கிடைத்தமை, வெளிநாடு சென்றமை போன்ற காரணங்கள் அடிப்படையில் நேர்முகப் பரீட்சைக்கு பங்குபற்றவில்லை என தொலைபேசியில் தெரிவித்துள்ளதாக. | நடைமுறையொன்றின் பிரகாரம் ஆட்சேர்ப்புகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ii) | நேர்முகப் பரீட்சை அறிக்கைகளின் பிரகாரம் உரிய சேவை அனுபவத்திற்காக ஆண்டொன்றிற்கு 03 புள்ளிகள் படி வழங்கப்பட்டிருந்த போதிலும், உயர் புள்ளிகளை பெற்றிருந்த விண்ணப்பதாரியொருவருக்கு அனுபவத்திற்கு புள்ளிகள் வழங்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்படவில்லை. மேலும், சேவைக் காலத்திற்காக நேர்முகப் பரீட்சைகள் குழு புள்ளி வழங்காமைக்கான காரணம் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. எனினும் பதவிகளுக்காக தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரியின் சேவைக் காலத்தினை பூர்த்தி செய்துள்ளமைக்கான சான்று கள் இல்லாதிருந்ததுடன், காலத்தினை உறுதி செய்வதற்காக முன் சேவை நிறுவனங்களிலிருந்து சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஆவணங்களின் சரியான தன்மையை உறுதி செய்துள்ளமை அவதானிக்கப்படவில்லை. | நேர்முகப் பரீட்சையானது இடம்பெறுவது உயிரியல் தரவில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்களை உறுதி செய்து அதன் சரியான தன்மையை பரீட்சிப்பதற்காகும். | ஆரம்ப பிரதிகள் குறித்த நிறுவனத்தினால் வெளியிடப்பட்டவையா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். நேர்முகப் பரீட்சை வெளிப்படைத்தன்மையுடன் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது. |
| **(ஈ)** | **<u>சாரதி பதவிக்காக ஆட்சேர்ப்பு செய்தல்</u>** | | |
| (i) | சாரதி பதவிக்காக ஆட்சேர்ப்பதற்காக 2018 யூன் 14 ஆந் திகதி மற்றும் 2018 ஒக்தோபர் 19 ஆந் திகதிகளின் போது 2 சந்தர்ப்பங்களில் நேர்முகப் பரீட்சைகளை நடாத்தி எட்டு பேர் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தனர். | இரு சந்தர்ப்பங்களில் இரு அமைச்சுப் பிரதிநிதிகள் பங்குபற்றியிருந்தமையால் அதற்கமைய புள்ளிகளை வழங்கும் அடிப்படைகள் | நிலையான புள்ளி வழங்கும் அடிப்படையொன்றினை தாபிக்க வேண்டும். அது நபரொருவரின் மீது தங்கியிருத்தல் |

| | | | |
|---|---|---|---|
| | நேர்முகப் பரீட்சைகள் சபையினால் அந்த இரு சந்தர்ப்பங்களில் கல்விசார் தகைமைகள் மற்றும் தொழில்சார் தகைமைகளுக்காக புள்ளிகளை வழங்குதல் ஒன்றுக்கொன்று வேறுபட்டதாக மேற்கொள்ளப்பட்டிருந்ததாக அவதானிக்கப்பட்டது. | மாற்றமடைந்துள்ளதாக. | அவசியமற்றது. |
| (ii) | அவ்வாறு இணைத்துக்கொள்ளப்பட்ட 6 சாரதிகளின் கல்விசார் தகைமைகளை உறுதிப்படுத்துவதற்காக பரீட்சைகள் ஆணையாளரால் வழங்கப்பட்ட சான்றிதழ்கள் வழங்கப்பட்டிராததுடன், சபையினால் அதன் சாரியான தன்மை உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஆணையாளரால் வழங்கப்பட்ட சான்றிதழ்களை பரிசீலிப்பது ஆட்சேர்க்கப்பட்டதன் பின்னர் தகுதிகாண் காலத்தின் என்பதுடன், பெரும்பாலாக ஒரு வருடத்தினுள் சரியான தன்மை உறுதிப்படுத்தப்படும் என்பதும். | நேர்முகப் பரீட்சையின் போது மூலப் பிரதிகள் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட வேண்டியமை. |
| (iii) | 2018 ஆகஸ்ட் 20 ஆந் திகதி பத்திரிக்கை அறிவித்தலின் பிரகாரம் 03 சாரதி பதவிகளுக்காக 320 விண்ணப்பங்கள் கிடைத்திருந்ததுடன், அவற்றுள் 29 மாத்திரம் நேர்முகப் பரீட்சைகளுக்காக அழைக்கப்பட்டிருந்தது. எனினும் இணைத்துக்கொள்ளப்பட்ட மூன்று விண்ணப்பதாரிகளில் இருவரின் விண்ணப்பங்களும் நேர்முகப் பரீட்சைத் திகதிக்கு முன்னர் கிடைத்த விண்ணப்பங்களாக அவததானிக்கப்பட்டது. | தலைவருக்கு பதிவுத் தபாலின் மூலம் மக்கள் வேலைவாய்ப்புகளை பெற்றக்கொள்வததற்காக விண்ணப்பங்களை முன்வைக்க முடியும் என்பது மற்றும் நேர்முகப் பரீடட்சைகள் நடாத்தப்படும் சந்தர்ப்பத்தில் அந்த விண்ணப்பங்கள் கவனத்திற் கொள்ளப்படும் என்பது. | முறையான ஆட்சேர்ப்பு கொள்கையொன்றினை நிறுவ வேண்டியமை. மேலும், 2015 திசெம்பர் 15 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புகள் மற்றும் பதவியுயர்த்தல் நடைமுறைக்கமைய அனைத்து ஆட்சேர்ப்புகளும் இடம்பெற வேண்டும் என்பது. |

## 3.10 வாகனக் கட்டமைப்பின் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| **(அ)** | **<u>வாகனங்களை கைத்தவிர்ப்பு செய்தல்</u>** | | |
| (i) | சபையினால் இலக்கம் GJ-3934 மற்றும் 65-3920 இலக்கமுடைய வாகனங்களின் பழுதுபார்த்தல்களுக்காக ஆகக்குறைந்தது 03 நிறுவனங்களிடமிருந்து கூறுவிலைகள் கோரப்படாது | முன்னாள் தலைவரால் வாகனங்கள் பொருளாதார ரீதியில் ஆக்கபூர்வமானதாக இல்லாதிருந்தமையால் கைத்தவிரிப்பு செய்வதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டதால் கைத்தவிர்ப்பு செய்ததாக. | சொத்துக்களின் பராமரிப்பினை உரிய முறையில் மேற்கொள்வதற்காக புதிய உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகளை அறிமுகப்படுத்தல். |

| | | | |
|---|---|---|---|
| | உரிய முகவர் நிறுவனங்களுடாக மாத்திரம் மதிப்பீடொன்று பெற்றுக்கொள்ளப்பட்டு, அதனை அடிப்படையாக கொண்டு பழுபார்த்தல் மேற்கொள்ளல் பொருளாதார ரீதியாக ஆக்கபூர்வமானதல்ல எனக் குறிப்பிட்டு வாகனங்கள் கைத்தவிர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | | |
| (ii) | வாகனங்களின் கைத்தவிர்ப்பிற்காக கேள்வி ஆவணங்களை விநியோகிப்பதற்காக மீளச் செலுத்தப்படும் ரூபா 5,0000 ஆன வைப்பொன்று மற்றும் மீளச் செலுத்தப்படாத ரூபா 3,000 ஆன வைப்பொன்றுமாக ரூபா 160,500 ஆன தொகை நிர்வாக உத்தியோகத்தரால் நேரடியாக பெற்றுக்கொள்ளப்பட்டு பின்னர் வங்கியிலிடப்பட்டிருந்தது. உரிய பற்றுச்சீட்டுக்களில் வழங்குநரின் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் பணம் செலுத்தியமைக்கான காரணம் போன்ற எந்த தகவலும் உள்ளடக்கப்பட்டிராததுடன், கேள்வி அறிவித்தல்களின் பிரகாரம் 2018 ஏப்ரல் 05 ஆந் திகதி பி.ப. 1.00 வரை மாத்திரம் விண்ணப்பங்கள் வழங்கப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், 07 விண்ணப்பங்கள் அந்த நேரத்தின் பின்னர் விநியோகிக்கப்பட்டிருந்தன. | பணம் வைப்புச் செய்யப்பட்ட நேரங்கள் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், ஒரு பற்றுச்சீட்டின் வங்கியிலிடப்பட்ட நேரம் மாத்திரம் தாமதமொன்று நிலவுவதாக. | உள்ளக கட்டுப்பாட்டு முறையொன்று நிறுவப்பட வேண்டும். |
| (iii) | இலக்கம் WP65-3920 கொண்ட வாகனத்திற்காக கூடுதலான கூறுவிலைகள் சபையின் விற்பனை முகவர்களாக செயற்படும் இருவராலேயே சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதற்கமைய உச்ச விலைகள் | முதலாவது விலை முன்வைத்த நபர் நிராகரிக்கப்பட்டுள்ளதுடன், வாகனத்தை பெற்றுக்கொண்ட நபரினால் ஆவணங்கள் பொறுப்பேற்கப்பட்டுள்ளன. இரண்டாவதாக விலையினை முன்வைத்த நபர் வாகனம் உள்ளடங்கலாக அனைத்து உதிரிப்பாகங்கள் கையொப்பமிட்டு | உரிய நடைமுறைக்கமைய வாகன கைத்தவிர்ப்பு வெளிப்படைத் தன்மையுடன் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது. |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் இரண்டாவது உச்ச விலையாக ரூபா 3,650,000 மற்றும் ரூபா 3,550,000 முன்வைக்கப்பட்டிருந்தது. அவற்றுள் ரூபா 3,650,000 விலையினை முன்வைத்த நபர் வாகனத்தினை கொண்டு செல்ல வராததன் காரணத்தால் இரண்டாவது விலையினை சமர்ப்பித்த அந்த முகவரியிலேயே உள்ள மற்றைய கோரிக்கையாளருக்கு வாகனம் ரூபா 100,000 இனால் குறைத்து வழங்கப்பட்டிருந்ததாக அறிக்கையிடப்பட்டிருந்தது. எனினும் உச்ச விலையினை சமர்ப்பித்த பின்னர் கொள்வனவினை நிராகரித்தவரினால் வாகனம் எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய சபையுடன் நாளாந்தம் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடும் முகவர் ஒருவருடன் மேற்கொள்ளப்பட்ட இந்த கொடுக்கல் வாங்கல் தொடர்பில் உரிய தேடுதல் இல்லாது சபையின் பெறுகைகள் குழுவினால் வாகனத்தினை வழங்குவதற்கு அங்கீகரிக்கப்பட்டிருந்தது. | பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாகவும், அவரின் விருப்பப்படி மற்றொருவர் வாகனத்தை ஓட்டிச் சென்றுள்ளதாக. | |
| (iv) | குறித்த வாகனம் விற்பனை செய்யப்பட்டு 11 மாதங்களின் பின்னர் கொள்வனவு செய்த நபரின் பெயரில் பதிவு செய்ய நடவடிக்கை எடுத்திருந்த சந்தர்ப்பத்தில் 2003/2004 ஆம் ஆண்டுகளில் சொகுசு வரி சபையினால் செலுத்தப்பட்டிராமையால் அதனை செலுத்தி பற்றுச்சீட்டினை சமர்ப்பிக்குமாறு அவரால் 2019 சனவரி 26 ஆந் திகதி சபைக்கு கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது. அதற்கமைய சபையினால் 2019 மார்ச் 25 ஆந் திகதி | தண்டப்பணத்தை செலுத்திய பற்றுச்சீட்டு கேள்வியாளரின் கோரிக்கையின் அடிப்படையில் சகோதரருக்கு வழங்கப்பட்டுள்ளதாக. | உரிய நடைமுறைக்கமைய வாகனக் கைத்தவிரிப்பு வெளிப்படைத்தன்மையுடன் இடம்பெற வேண்டும் என்பது. |

ரூபா 7,500 ஆன தண்டப்பணம் செலுத்தப்பட்டு அந்த பற்றுச்சீட்டு வாகனத்தை கொள்வனவு செய்தலை நிராகரித்த நபருக்கு கையளிக்கப்பட்டிருந்தது.

## 4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் நாளதுவரையாக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தின் பிரதியொன்று அதற்கடுத்த நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய போதிலும், சபையினால் 2018 ஆம் ஆண்டிற்குரிய கூட்டிணைந்த திட்டம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு மேற்குறிப்பிட்ட முறையில் முன்வைக்கப்பட்டிராததுடன், பணிப்பாளர் சபை அதனை 2018 செப்தம்பர் 25 ஆந் திகதி இடம்பெற்ற கூட்டமொன்றிலேயே அங்கீகரித்திருந்தது. | அவதானிப்புடன் இணங்கியுள்ளது. உரிய அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |
| (ஆ) பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 2018 சனவரி 09 ஆந் திகதிய PE/MD/NLB/MO/2018 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் பணிப்பாளர் சபை | 2019 ஆம் ஆண்டின் போது குறித்த திட்டங்கள் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாக. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | அங்கீகரித்த கூட்டிணைந்த திட்டம், வருடாந்த பாதீட்டுடன் செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் வருடாந்த பெறுகைகள் திட்டம் நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னர் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், சபை அதற்கமைய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |

## 4.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 2018 சனவரி 09 ஆந் திகதிய PE/MD/NLB/MO/2018 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் செயல்நடவடிக்கை திட்டத்தின் செயலாற்றல் அறிக்கை மற்றும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பான காலாண்டு ரீதியான அறிக்கைகள் காலாண்டு நிறைவடைந்து 30 நாட்களினுள் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பது குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், சபையின் முகாமைத்துவம் அதற்கமைய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் செயலாற்றல் மதிப்பீடு நிதி அமைச்சு மற்றும் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள இலக்குகள் அதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள், மதிப்பிடப்பட்ட அளவுகள் மற்றும் கிரயங்கள், உரிய காலப்பகுதிகளும் பாதீட்டினுள் உள்ளடங்கும் வகையில் 2018 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கை திட்டம் விரிவாக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | 2019 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படும் என்பது. | செயல்நடவடிக்கை திட்டத்தின் செயன்முன்னேற்றம் கால ரீதியாக பரீட்சிப்பதற்காக பொருத்தமான நடைமுறையொன்று அறிமுகப்படுத்த வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | என்பதுடன், செயல்நடவடிக்கை திட்டத்தின் செயன்முன்னேற்றம் கால ரீதியாக பரீட்சிப்பதற்காக பொருத்தமான நடைமுறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | சபையின் கூட்டிணைந்த திட்டம், செயல்நடவடிக்கை திட்டம், பெறுகைகள் திட்டம் மற்றும் வருடாந்த பாதீடு ஆகியவை ஒன்றுக்கொன்று இணைந்தததாக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கூட்டிணைந்த மற்றும் பெறுகைகள் திட்டத்தில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஒன்றுக்கொன்று பொருந்தும் வகையில் தயாரிக்கப்பட வேண்டியமை. |
| (ஈ) | சபையின் விளம்பர திட்டத்தின் பிரகாரம் முதலாம் காலாண்டின் போது வருடாந்த நடப்பாண்டின் நாட்காட்டிகளுக்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதி அமைச்சிற்கு மற்றும் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டு அங்கீகாரத்தினை எதிர்பார்த்துள்ளதாக. | உரிய அங்கீகாரங்களின் அடிப்படையில் செயற்பட வேண்டும் என்பது. |

**4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2003 யூன் 02 ஆந் திகதிய PED 12 ஆம் இலக்க நல்லாட்சியின் கீழான பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.1 பந்தியின் பிரகாரம் பாதீட்டினுள் பாதிடப்பட்ட ஐந்தொகையும் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும், சபையின் திருத்தப்பட்ட பாதீட்டினுள் பாதிடப்பட்ட ஐந்தொகை உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டிற்கான பாதீட்டினூடாக திருத்தப்பட்டுள்ளதாக. | சுற்றறிக்கையின் பிரகாரம் பாதீடு தயாரிக்கப்பட வேண்டியமை. |
| (ஆ) | 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது கணக்கீட்டு முறையொன்றினை தாபிப்பதற்கு அந்தந்த வருடங்களில் ரூபா 30 மில்லியன் பாதீட்டு ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், இது வரையிலும் கணக்கீட்டு முறைமையொன்றினை தாபிப்பதற்கு சபை தவறியிருந்தது. | ஒன்றிணைக்கப்பட்ட கணக்கீட்டு முறைமையொன்றினை தாபிப்பதற்கு பணிப்பாளர் சபை பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக. | கணக்கீட்டு முறைமையொன்றினை தாபிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியமை. |
| (இ) | 2018 ஆம் ஆண்டினுள் 11 விற்பனை முகவர் கூட்டங்களை நடாத்துவதற்காக ரூபா 6,250,000 ஆன தொகை பாதீட்டினூடாக ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அந்த நிதியேற்பாடு போதுமானதாக | கூடுதலாக செலுத்தப்பட்டுள்ள செலவினங்களுக்காக உரிய அங்கீகாரத்தினை பெற்று கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக. | நடைமுறைச் சாத்தியமான பாதீடுகள் தயாரிக்கப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | இல்லாதிருந்தமையின் அடிப்படையில் ரூபா 2,400,000 ஆன மேலதிக நிதியேற்பாட்டினை பெற்றுக்கொள்ள சபைக்கு நேர்ந்திருந்தது. அதற்கமைய அங்கீகரிக்கப்பட்ட மொத்த நிதியேற்பாடடானது ரூபா 8,650,000 ஆன போதிலும், இந்த கூட்டத்தினை நடாத்துவதற்காக ரூபா 10,979,490 செலவிடப்பட்டிருந்தது. அதற்கமைய ரூபா 2,329,490 ஆன மேலதிக செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | |
| (ஈ) | 2017 ஆம் ஆண்டின் பாதீட்டு மதிப்பீடுகளினூடாக விற்பனை மேம்படுத்தல் பணிகளுக்காக வாகனமொன்றினை நிர்மாணிப்பதற்காக ரூபா 10.2 மில்லியனான நிதியேற்பாடு உள்ள போது டிக்கட்டுகளை கொண்டு செல்வதற்காக கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த க்ரூ கெப்கள் 2 இல் ஒன்றினை விற்பனை மேம்படுத்தல் வாாகனமொன்றாக மாற்றுவதற்கு சபையினால் திட்டமொன்றில்லாது செயற்பட்டிருந்தமையால் ரூபா 5,565,000 ஆன மூலதனமொன்று விளைவற்ற விதத்தில் காணப்பட்டமை கணக்காய்வினால் அவதானிக்கப்பட்டது. | லொத்தர் சீட்டுகளை கிராமத்திற்கு கொண்டு செல்வதற்கான மூலோபாயங்களாக இந்த வாகனம் விளம்பர வண்டியொன்றாக தயாரித்து பயன்படுத்துவதற்கு மாற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டவாறு உள்ளன. | பணிகள் திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட வேண்டியமை. |
| (உ) | 2018 ஆம் ஆண்டின் விளம்பர முகவர் நிறுவனங்களை தெரிவு செய்வதற்காக திருத்தப்பட்ட பாதீட்டினுள் ரூபா 196,776,045 ஆன பெறுமதியும், பெறுகைகள் திட்டத்தினுள் ரூபா 100,000,000 ஆன பெறுமதியும் ஒதுக்கப்பட்டிருந்தமையின் காரணத்தால் பெறுகைகள் திட்டத்திற்கு புறம்பாக பாதீட்டு நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | பாதீடு மற்றும் பெறுகைகள் திட்டத்தின் பெறுமதிகள் நடைமுறைச் சாத்தியமானதாக இருக்க வேண்டும் என்பது. |
| (ஊ) | சபையின் 09 செலவின விடயங்களுக்கு உரியதாக மேற்கொள்ளப்பட்டிருந்த நிதியேற்பாட்டு தொகை மற்றும் உள்ளபடியான செலவினங்களை பரீட்சிக்கும் போது அந்த செலவின விடயங்களுக்குரியதாக 67 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான வீச்சில் பணம் எஞ்சியிருந்தமை | பாதீடு, கூட்டிணைந்த திட்டம், செயல்நடவடிக்கை திட்டம் ஆகியன காலாண்டு ரீதியாக மதிப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டு ஆக்கபூர்வமான கருவியொன்றாக ஈடுபடுத்துவதற்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளது. | திட்டவட்டமான பாதீட்டு கட்டுப்பாட்டு முறையொன்று ஏற்படுத்தப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | அவதானிக்கப்பட்டது. அதற்கமைய இதன் மூலம் புலப்படுவது சபையினால் மீளாய்வாண்டிற்கு உரியதாக இந்த செலவின விடயங்களுக்காக செலவினங்களை உரிய முறையில் எதிர்வுகூற தவறியுள்ளமை மற்றும் அதன் காரணமாக நிறுவனத்திற்கு பாதீட்டினை கட்டுப்பாட்டு முறையொன்றாக பயன்படுத்த முடியாதிருந்தது என்பதாகும். | | |
| (எ) | தேவையினை இனங்காணாது பாதீட்டு நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்வதற்கான நிதியேற்பாடுகளில் 60 சதவீதமானது குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்டது. | 2019 ஆம் ஆண்டின் போது திருத்துவதாக குறிப்பிடப்பட்டிருந்தது. | நடைமுறைச் சாத்தியமான பாதீடுகள் தயாரிக்கப்பட வேண்டியமை. |

**4.4 சுற்றாடல் பிரச்சினைகள் மற்றும் சமூகப் பொறுப்பினை நிறைவேற்றல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| **(அ)** | **லொத்தர் சீட்டிழுபின் போது இடம்பெறும் மேற்பார்வை நடைமுறை** | | |
| (i) | முத்திரையிடப்பட்ட ஸ்டிக்கர்களுடனான பந்துகளின் உறைகளை திறக்கும் போது மற்றும் அவற்றை மீள முத்திரையிடும் போது மேற்பார்வை உத்தியோகத்தருடன் சபையின் பொறுப்புக்கூற வேண்டிய சமனான மட்டத்திலான பதவிகளை வகிக்கும் பதவிநிலை அல்லது நிறைவேற்று மட்டத்திலான உத்தியோகத்தர் ஒருவர் ஸ்டிக்கரின் மேல் கையொப்பமிடாமை. | இடைநிலை மட்டத்திலான முகாமையாளர்கள் அந்த பணிகளுக்கு பொருத்தமானவர்கள் என்பது. | கணக்காய்வு அவதானிப்புகளினூடாக சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ள விதத்தில் கட்டுப்பாட்டு முறைமை அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். |
| (ii) | சீட்டிழுப்பு சுற்றினை ஆரம்பிப்பதற்கு முன்னர் அச்சிடப்பட்ட டிக்கட்டுகளின் எண்ணிக்கை, விற்பனை மற்றும் சேமிப்பு | கண்காணிப்பு கணக்காய்வு உத்தியோகத்தருக்கு முன்வைப்பதற்கு பதிலாக பொது முகாமையாளருக்கு சமர்ப்பிப்பதாக. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்பட்ட சிட்டிழுப்பு அறிக்கையின் சான்றுபடுத்தப்பட்ட பிரதிகள் கண்காணிப்பு கணக்காய்வு உத்தியோகத்தருக்க முன்வைக்கப்படாமை. | | |
| (iii) | சீட்டிழுப்பு நிகழ்ச்சி ஒளிபரப்பின் இறுதியில் கணக்காய்வு கண்காணிப்பு உத்தியோகத்தரின் முன்னிலையில் பந்துகளுடனான பைகளை முத்திரையிடும் சந்தர்ப்பத்தில் முத்திரையிடும் கடமை ஆரம்பிப்பதற்கு முன்னர் கண்காணிப்பு சபையிலுள்ள சிறு அங்கத்தவர்கள் இருவரையும் கண்காணிப்பு பணியிலிருந்து விடுவித்தல். | கண்காணிப்பு சபையினுள் மேற்கொள்ளப்படும் கணக்காய்வின் மேற்பார்வை, கண்காணிப்பு சபையின் சிறு அங்கத்தவர்களின் கண்காணிப்பிற்கு உட்படுதல் அவசியமற்றது என்பதால் அந்த இருவரையும் கண்காணிப்பு பணியிலிருந்து விடுவிப்பதாக. | - மேற்படி - |
| (iv) | சீட்டிழுப்பு சந்தர்ப்பத்தின் பின்னர் அந்த சந்தர்ப்பத்திலேயே இறுதிப் பெறுபேறுகளின் அறிக்கையின் பிரதியொன்று கண்காணிப்பு கணக்காய்வு உத்தியோகத்தருக்கு வழங்கும் நடைமுறையொன்னு இல்லாதிருந்தமை. | உத்தியோகபூர்வ பெறுபேறுகள் இரகசியமான தகவல் என்பதால் கண்காணிப்பு கணக்காய்வு உத்தியோகத்தருக்கு பின்னர் பிரதியொன்று வழங்கப்படுவதாக. | - மேற்படி - |
| **(ஆ)** | **<u>சீட்டிழுப்பு பரிசு பெறுபேறுகளின் நம்பகத்தன்மை</u>** | | |
| (i) | சீட்டிழுப்பின் போது விற்பனைகளாக கருதிய பெறுமதி ரூபா 5,559,820 ஆன டிக்கட்கள் சீட்டிழுப்பின் பின்னர் விற்பனை செய்யப்படாது மீள அனுப்பப்பட்ட டிக்கட்டுகளாக கருதப்பட்டிருந்தது. | 2018/03 மாதத்தின் தெல்தெனிய பிரதேசத்தில் இடம்பெற்ற பாதகமான நிலமை இதற்கு காரணமாக அமைந்தது. | முறையான சீட்டிழுப்பு நடைமுறையொன்றினை நடைமுறைப்படுத்த வேண்டியமை. |
| (ii) | சபையினால் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டு நட்டம் மற்றும் சேதங்கள் ஏற்பட்டதன் பின்னர் | எதிர்காலத்தில் இவ்வாறான விடயங்கள் இடம்பெறாதிருக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | பரிசு வழங்கும் நடைமுறை ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். |

பழுதுபார்க்கப்பட்ட ரூபா 4,254,660 கூட்டுத்தொகையான மோட்டார் சைக்கிளொன்று மற்றும் 02 கார்கள் அத கோடிபதி ஷனிதா, தச லக்ஷபதி மற்றும் சுப்பர் போல் எனும் லொத்தர்களின் பரிசுகளாக வழங்கப்பட்டிருந்தது.

நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பில் முறையான விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டு பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர் இனங்காணப்பட வேண்டும் என்பது.